بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 11

இதழ் 8-9

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - ரமலான் 01 - 08

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - தப்லீஃக் 19 - 26 ★ 19 - 26 பிப்ரவரி 2026

## அல்லாஹ்வின் கட்டளை

شَهْرُ رَمَضَانَ الَّذِیْٓ اُنْزِلَ فِیْهِ الْقُرْاٰنُ
هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ
مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ ۚ
فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ ۗ
وَمَنْ كَانَ مَرِيْضًا اَوْ عَلٰى
سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ۗ
يُرِيْدُ اللّٰهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيْدُ
بِكُمُ الْعُسْرَ وَلِتُكْمِلُوا
الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى
مَا هَدٰىكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿١٨٦﴾

.(2:186)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## பொருள்

ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பெற்ற மாதம் ஆகும். குர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக் கூடியதும், நேர்வழியை தெளிவாக்கக்கூடியதும் பிரித்தறியக் கூடியதும் ஆகும். எனவே உங்களுள் அம்மாதத்தை காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் (விட்டுப் போன நோன்பை) மற்ற நாட்களில் கணக்கிட்டு நோற்கவும்.அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகின்றான். உங்களுக்கு கடினத்தை (த்தர) விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையை பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனை பெருமை படுத்துவதற்காகவும் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே (இந்த கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான்)

******* *

## நபிமொழி

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறை தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ரமலான் வருகின்றபோது சொர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன; மேலும் நரகின் வாசல்கள் நன்றாக அடைக்கப்பட்டு விடுகின்றன; மேலும் ஷைத்தான் சங்கிலிகளால் கட்டப்படுகின்றான்.

(ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 1779)

******* *

## தொழுகை உள்ளத்தை தூய்மைப்படுத்துகின்றது நோன்பு உள்ளத்தை ஒளிமயமாக்குகின்றது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

சூரிய வெப்பம் என்பதற்கு ரம்ஸ் என்று (அரபியில்) கூறுவர். ரமலானில் மனிதன் உண்பதையும், குடிப்பதையும் மற்றும் அனைத்து பௌதிக இன்பங்களின் மீதும் பொறுமை கொள்கின்றான். மற்றொரு பக்கம், அல்லாஹ்வின் கட்டளைக்காக ஒரு வெப்பம், ஒரு சூடு மற்றும் உத்வேகத்தை மனிதன் தன்னிடம் உருவாக்குகின்றான். ஆன்மீக மற்றும் பௌதீக வெப்பமும், சூடும் இணைந்து ரமலான் ஆகிவிட்டது. கோடை மாதத்தில் அது வந்தது; எனவே ரமலான் என்றழைக்கப்படுகிறது என அகராதி வல்லுனர்கள் கூறுகின்றனர். என்னுடைய பார்வையில் இது சரியானது அல்ல. ஏனென்றால் அரேபியாவிற்கு இது சிறப்பம்சமாக இருக்க முடியாது. ஆன்மீக வெப்பம் என்பதன் பொருள் ஆன்மீக இன்பம், ஆர்வம் மற்றும் சூட்டை வழங்குவதாக அமைகின்றது. எந்த வெப்பத்தால் கற்கள் போன்றவை சூடாகி விடுகின்றனவோ அந்த வெப்பத்திற்கு ரம்ஸ் என்று கூறப்படுகின்றது. (அல்ஹகம், தொகுதி 5, 1901, ஜூலை 24, பக்கம் 2)

شَهْرُ رَمَضَانَ الَّذِیْٓ اُنْزِلَ فِیْهِ الْقُرْاٰنُ

என்பது ஒரு வாக்கியம் ஆகும். அதிலிருந்து ரமலான் மாதத்தின் மகத்துவம் தெரிய வருகிறது. இந்த மாதம் உள்ளத்தை ஒளியூட்டுவதற்கு சிறந்த மாதமாகும். அதிகமான கனவு காட்சிகள் இதில் கிடைக்கின்றன. தொழுகை உள்ளத்தை தூய்மைப்படுத்துகின்றது. மேலும் நோன்பு உள்ளதை ஒளிமயமாக்குகின்றது. உள்ளத்தை தூய்மைப்படுத்துதல் என்பதன் பொருள் என்னவென்றால், தீமையின் பக்கம் சாய்க்கும் நிலையில் இருந்து உள்ளத்திற்கு இரட்சிப்பு கிடைப்பதாகும். மேலும் உள்ளத்தை ஒளிமயமாக்குதல் என்பதன் பொருள் ஆன்மீக காட்சிக்கான வாசல் அந்த நபருக்கு திறந்து கொடுக்கப்படுகின்றது. அதன் மூலம் அவர் இறைவனைப் பார்த்துக் கொள்கிறார்.

நோன்பிற்கு மகத்தான கூலி உள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால் நோய்கள் மற்றும் நோக்கங்கள் இந்த அருட்கொடையிலிருந்து மனிதனை (சிலவேளை) இழப்பிற்குரியவையாக ஆக்கி விடுகின்றன. (அல்பத்ர் தொகுதி 7, 12 டிசம்பர் 1902 ஆம் ஆண்டு பக்கம் 52)

******* *

## ரமலான் ஒரு சிறப்பம்சம் கொண்ட மாதமாகும்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்பக்கராவின் 186-ம் வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ரமலான் ஒரு சிறப்பம்சம் கொண்ட மாதம் ஆகும். எந்த நபரின் உள்ளத்தில் இஸ்லாம் மற்றும் ஈமானின் முக்கியத்துவம் உள்ளதோ, அவரால் இந்த மாதம் வந்த உடனேயே தமது உள்ளத்தில் ஒரு சிறப்பான துடிப்பையும், தமது உடலில் குறிப்பிட்ட ஒரு வகையான நடுக்கத்தையும் உணராமல் இருக்கவே முடியாது. நமக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் இடையில் எத்தனை நூற்றாண்டுகள் கழிந்திருந்த போதிலும், எத்தனை வருடங்கள் நமக்கும் அன்னாருக்கும் இடையில் பிரிவு ஏற்பட்டுக் கொண்டே சென்றாலும் கூட, நமக்கும், அன்னாருக்கும் இடையில் எத்தனை நாட்கள் தொலைவு ஏற்பட்டு விட்டாலும் கூட எந்த நேரத்தில் ரமலான் மாதம் வந்து விடுகின்றதோ அப்போது அந்த அனைத்து நூற்றாண்டுகளையும், வருடங்களையும் இந்த மாதம் சுருட்டி மடக்கி சிறிதாக்கி விட்டதைப் போன்று நமக்கு தோன்றுகின்றது.மேலும் நாம் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்று அடைந்து விடுகின்றோம். இன்னும் கூறப்போனால், நமது ரஸூல் (ஸல்) அவர்களுக்கு அருகில் மட்டுமல்ல; மாறாக திருக்குர்ஆன் இறைவனிடமிருந்து இறங்கியிருப்பதால் அந்த அனைத்து தொலைவையும் ரமலான் மாதம் சுருட்டி ஒன்றாகக் கூட்டி நம்மை இறைவனுக்கு அருகில் கொண்டு சேர்த்து விட்டதைப் போன்று நமக்கு தோன்றுகின்றது. ஒரு மனிதனுக்கு இறைவனுடன் ஏற்பட்ட அந்த இடைவெளியை அது இவ்வாறு நீக்கி விடுகின்றது. மேலும் இவ்வாறு மறைந்து விடுகின்றது; தொலைவு அழிந்து விடுகின்றது. (தஃப்ஸீரே கபீர், தொகுதி 3, பக்கம் 191)

******* *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

لَا اِلٰہَ اِلَّا اللّٰہُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰہِ

## அருளுக்குரிய ரமலான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்திற்கு மகத்தான ஓர் அடையாளம்

அருளுக்குரிய ரமலான் மாதம் எங்கு இறை வணக்கம் மற்றும் படைப்பின சேவையை நினைவூட்டுகின்றதோ அங்கு இந்த மாதம் ஈருலகத் தலைவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்தின் மீதும் முத்திரை பதிக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணற்ற முன்னறிவிப்புகள் நிறைவேறி இருக்கின்றன. மேலும் கியாமத் நாள் வரை நிறைவேறிக் கொண்டே இருக்கும். அவற்றில் இந்தவோர் முன்னறிவிப்பும் அடங்கும். அதாவது அன்னார் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள்: எமது மஹ்திக்கு இரண்டு அடையாளங்கள் உள்ளன. வானம் மற்றும் பூமி படைக்கப்பட்ட நாள் முதல் இந்த அடையாளம் வேறு எவருக்காகவும் இந்த விதத்தில் வெளிப்பட்டது இல்லை.

மேலும் கூறினார்கள்: சந்திரனுக்கு ரமலானின் துவக்க இரவில் கிரகணம் ஏற்படும். அதே போன்று ரமலான் மாதத்தில் சூரியனுக்கும் அதற்கு விதிக்கப்பட்ட (அதாவது 27, 28, 29 க்கு இடைப்பட்ட ) நாட்களில் கிரகணம் ஏற்படும். மேலும் வானமும், பூமியும் படைக்கப்பட்ட நாள் முதல் இந்த இரு அடையாளங்களையும் எவருக்காகவும் அல்லாஹ் வெளிப்படுத்தியதில்லை. இந்த மகத்தான அடையாளம் வாக்களிக்கப்பட்ட மஸீஹூம், இமாம் மஹ்தியுமாகிய ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் நிறைவேறியது. இமாம் மஹ்தியாகவும், வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் தாம் தோன்றியிருப்பதாக அன்னார் (அலை) 1891 ஆம் ஆண்டு வாதம் செய்தார்கள். இவ்வாறு அன்னார் (அலை) வாதம் செய்து சரியாக மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, 1894 ஆம் ஆண்டு ரமலான் மாதத்தில் சந்திரனுக்கு ரமலான் 13ஆம் தேதி ஹிஜ்ரி 1311 ஆம் ஆண்டு அதாவது 1894 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் தேதி புதன்கிழமை அன்று 7 மணி முதல் ஒன்பது மணி வரை கிரகணம் ஏற்பட்டது. இதேபோன்று சூரிய கிரகணம் அதே ரமலானில் ஹிஜ்ரி 1311 ஆம் ஆண்டு ரமலான் மாதம் 28ஆம் தேதி அதாவது 1894 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆறாம் தேதி காலை 9 மணி முதல் 11 மணி வரை கிரகணம் ஏற்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு மிகவும் பொலிவுடன் நிறைவேறியது. அப்போது வாக்களிக்கப்பட்ட மஸீஹூம், மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் தான் இமாம் மஹ்தி என்ற வாதத்தையும் செய்திருந்தார்கள். இந்தக் காலகட்டத்தில் இந்த இறை அடையாளத்தைப் பார்த்து எண்ணற்ற மக்கள் இமாம் மஹ்தியை ஒப்புக்கொண்டார்கள். இந்த வருடம் ரமலான் 13 ஆம் தேதி சந்திர கிரகணம் ஏற்பட்டபோது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் ஜமாஅத் உறுப்பினர்களும் அதேபோன்று காதியான் சுற்றுவட்டாரத்தில் இருந்த மக்களும் சூரிய கிரகணத்தைப் பார்ப்பதற்கு மிகவும் கடுமையான ஆர்வத்துடன் காதியானில் காத்திருந்தார்கள். அவர்களில் பலர் சூரிய கிரகணத்தை காண்பதற்காக காதியான் வந்துவிட்டார்கள். அருளுக்குரிய ரமலான் மாதத்தில் 28ஆம் தேதி சூரிய கிரகணத்தைப் பார்த்து அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹூம் மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் உண்மைத்துவத்தின் மீது உள்ளத்தால் நம்பிக்கை கொண்டனர். மேலும் ஈருலகத் தலைவரின் இந்த அற்புத அடையாளத்தை கண்டு அன்னாரின் மீது இதயத்தின் ஆழத்தில் இருந்து துரூத் ஓதினர்.

இந்த விண்ணின் அடையாளங்கள் வெளிப்பட்டபோது காதியானின் சூழல்கள் எப்படி இருந்தன? இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா அய்யூப் பேக் ஸாஹிப் (ரலி) அவர்கள் மற்றும் அன்னாருடைய சகோதரரின் ஈமானை வலுவூட்டக்கூடிய கூற்றை படியுங்கள். அவர்கள் கூறுகின்றனர்:

ரமலான் மாதத்தில் சந்திரனுக்கும், சூரியனுக்கும் கிரகணம் ஏற்படுகின்ற முன்னறிவிப்பு தாருல் குத்னீ போன்ற ஹதீஸ்களில் இமாம் மஹ்தியின் அடையாளமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மார்ச் மாதம், 1894 ஆம் ஆண்டு முதல் முதலில் சந்திரனுக்கு ரமலானில் கிரகணம் ஏற்பட்டது. அந்த ரமலானில் சூரியனுக்கு கிரகணம் பிடிக்கின்ற நாளன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இந்த அடையாளத்தை பார்க்க வேண்டும்; மேலும் கிரகணத் தொழுகை தொழ வேண்டும் என்ற எண்ணத்துடன் நாங்கள் இரு சகோதரர்களும் வியாழக்கிழமை மாலை லாகூரில் இருந்து புறப்பட்டு சுமார் 11 மணி அளவில் இரவில் பட்டாலா சென்றடைந்தோம். அடுத்த நாள் காலை அதாவது ஏப்ரல் ஆறாம் தேதி 1894 ஆம் ஆண்டு ஜும்ஆ நாளன்று சூரிய கிரகணம் ஏற்பட்டது. சூறாவளி காற்று வீசிக்கொண்டிருந்தது; இடி இடித்துக் கொண்டிருந்தது; மின்னல் வெட்டிக் கொண்டு இருந்தது. காற்று எதிர் திசையில் வீசிக் கொண்டிருந்தது. மண் காற்றில் பறந்து கண்களில் விழுந்து கொண்டிருந்தது. பாதங்களை நன்றாக எடுத்து வைக்க முடியாமல் இருந்தது. மேலும் வழிப்பாதை மின்னல் வெட்டிக்கொண்டு இருந்ததால் தெரிந்து வந்தது அத்துடன் எல்லோரும் இவ்வாறு எண்ணம் கொண்டோம். என்ன ஆனாலும் சரி; இரவோடு இரவாக காதியான் சென்றடைந்து விட வேண்டும் என்று எண்ணம் கொண்டோம். எனவே மூவரும் வழிப் பாதையில் நின்று கொண்டு மிகவும் இறுக்கத்துடன் துஆ செய்தோம். வானம் மற்றும் பூமியின் வல்லமை மிக்க இறைவா! நாங்களோ உன்னுடைய எளிய அடியார்கள் ஆவோம்; உன்னுடைய மஸீஹை காண்பதற்காக செல்கின்றோம்; நீ எங்கள் மீது கருணை காட்டுவாயாக! எங்களுக்காக வழிப் பாதையை எளிமையாக்கி தருவாயாக! மேலும் இந்த எதிரான சூழலை நீக்குவாயாக! தற்போது இறுதி சொல் வாயிலிருந்து வெளிவந்திருந்தது. அதே நேரத்தில் காற்றின் திசை மாற்றி விட்டது. மேலும் எங்களுக்கு காற்று முன்னால் வீசுவதற்கு பகரமாக எங்களது பயணத்திற்கு உதவியாக ஆகிவிட்டது. நாங்கள் காற்றில் பறந்து கொண்டிருப்பதை போன்று எங்களுக்கு தெரிந்தது. சிறிது நேரத்தில் நதியை சென்றடைந்து விட்டோம். அந்த இடத்தில் சில ஆலங்கட்டி மழை பொழிய தொடங்கிவிட்டது. நதிக்கு அருகில் ஒரு வீடு இருந்தது. அதில் நுழைந்து விட்டோம்; நிலத்தில் தூங்கிவிட்டோம். சிறிது நேரத்துக்கு பிறகு கண்கள் திறந்தன. அப்போது நட்சத்திரங்கள் தென்பட்டன. வானம் தெளிவாக இருந்தது. இடியும் சூறாவளியும் நின்று விட்டது. எனவே பின்னர் புறப்பட்டோம். மேலும் அதிகாலையில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் (அலை) அவர்களுடன் ஸஹ்ரீ உண்டோம். சூரிய கிரகணத் தொழுகையை தொழுதோம். ஹஸ்ரத் ஸய்யிது முஹம்மது ஹஸன் ஸாஹிப் அம்ரூஹி (ரலி) அவர்கள் மஸ்ஜித் முபாரக்கின் மேல் தளத்தில் கிரகணத் தொழுகையை தொழ வைத்தார்கள். 3 மணி நேரம் இந்த தொழுகையானது நீண்டதாக இருந்தது. பல நண்பர்களும் இதில் கலந்து கொண்டிருந்தார்கள். கண்ணாடியில் மை தடவி அதன் மூலம் கிரகணத்தை பார்க்கின்ற நடைமுறை இருந்தது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (ரலி) அவர்களிடம் கிரகணம் தொடங்கிவிட்டது என்று ஒருவர் கூறினார். அப்போது, அதனை கண்ணாடியின் மூலமாக அன்னார் (அலை) பார்த்தார்கள்.

எனவே ஒவ்வொரு ரமலானும் அஹ்மதிகளுக்கு ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பின் உண்மைத்துவத்தை நினைவூட்டுகின்றது; மேலும் ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் உண்மையாளர் ஆவார்கள் என்பதை நினைவூட்டுகின்றது. இதற்கு அஹ்மதிகள் இவ்வாறு நன்றி செலுத்த வேண்டும். அதாவது நாம் அருளுக்குரிய ரமலானை மிகவும் சிறந்த ஏற்பாட்டுடன் அதனுடைய அனைத்து நிபந்தனைகளையும் முழுமை செய்தவாறு கழிக்க வேண்டும். இறை வணக்கம், இறை நேசம் நமது உணவாக ஆகிவிட வேண்டும். மேலும் இறை படைப்பினங்களுடன் அனுதாபம் கொள்ள வேண்டும். இவை அனைத்தும் நமது அன்றாட நடைமுறையாக இருக்க வேண்டும். நாம் ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் முஃமினின் கலீஃபத்துல் மஸீஹ் அல்காமிஸ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடைய அனைத்து வழிகாட்டல்களையும் கவனத்துடன் செவியேற்று, அதன்படி உள்ளத்தாலும், உயிராலும் செயல்படக் கூடியவர்களாக ஆகிவிட வேண்டும்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் ரமலானுடைய அருள்களிலிருந்து முழுமையாக பங்கு பெறக்கூடிய நற்பேறை வழங்குவானாக! ஆமீன்!

******* ******* *******

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இறை நேசம்**

அல்லாஹ்வின் மீது அவர்கள் கொண்டிருந்த உண்மையான நேசம் ஒவ்வொரு கணமும் தெரிந்தது. ஒருமுறை அவர்கள் அழுதபடி பிரார்த்தனை செய்வதை நான் கண்டேன். மிகுந்த வலியுடன் தனது நேசனை அதாவது இறைவனை அழைத்துக் கொண்டிருந்தார்கள். என் அன்பிற்குரிய அல்லாஹ்வே! எனது அன்பிற்குரிய அல்லாஹ்வே! என்ற வார்த்தைகள் அவர்கள் நாவில் மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருந்தன. இது நான் நேரில் கண்ட காட்சியாகும்

அன்னார் (அலை) இறைத் தூதர் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பராக இருந்தார்கள். தமது மேலான அல்லாஹ்வின் நேசராக இருந்தார்கள். அன்னாரின் முகத்தில் அந்த இறை நேசத்தின் ஒளி இருந்தது. அன்னாரின் நாவில் அதே ஒளி வெளிப்பட்டு வந்தது. அன்னாரின் நாவில் அதே ஒளியின் ஊற்று பீறிட்டுக் கொண்டிருந்தது. ஆனால் பார்வையற்றவர்களால் பார்க்க முடியாது.

(ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் ஸாஹிபா (ரலி) அவர்களின் அறிவிப்பு)

நமக்கும், சிறைவாசிகளுக்கும், இன்னல்களில் சிக்கியிருக்கும் அனைத்து அஹ்மதிகளுக்கும் இறை நேசம் பற்றிய புரிதல் முன்னரை விட அதிகரிக்கட்டுமாக! கஷ்டங்களின் காரணமாக இறைவன் மீதான அன்பு குறையாமல் முன்பை விட அதிகரிக்கட்டுமாக! அநீதிக்குள்ளானவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் உலகின் அநீதிக்குள்ளான அனைவரையும் அநியாயக்காரர்களின் பிடியிலிருந்து விடுவிப்பானாக! உலகில் அமைதி நிலவட்டுமாக!

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 02 ஜனவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**5** ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **02ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த குத்பாவில் இறை நேசம் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின் சில விஷயங்கள் எடுத்துரைக்கப்பட்டிருந்தன. இந்தக் காலத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரின் நடத்தை மற்றும் தமது எஜமானரை பின்பற்றுதலில் அந்த இறை நேசத்தின் பிரதிபலிப்பு நமக்கு தென்படுகிறது. இத்தகைய முன்மாதிரிகள் இன்றும் இருக்கின்றன. அதாவது அல்லாஹ்வின் மீதான நேசத்திற்கான உயர்தரத்தையும், அதன் விளைவாக அன்னாருக்கு கிடைத்த அல்லாஹ்வின் அருளையும், அல்லாஹ்விடம் அன்னார் (அலை) கொண்டிருந்த நேசத்தையும் மக்களும் உணர்ந்து வந்தனர். ஆனால், எவ்வாறு இருப்பினும், மீதமுள்ள சிறிது சம்பவங்களை எடுத்துரைப்பதற்கு முன்னதாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சொந்த வார்த்தைகளில் அந்த அன்பைப் பற்றி நான் குறிப்பிடுகிறேன்.

ஓர் இடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எனது எந்த அமலின் காரணமாக இந்த இறை அருள் எனக்கு கிடைத்தது என்பதை என்னால் எடுத்துரைக்க இயலாது. எனினும், இயல்பாகவே இறைவனின் பக்கம் செல்வதை எந்த விஷயத்தாலும் தடுத்து நிறுத்த முடியாத நன்றியுணர்வுடன் கூடிய ஓர் ஈர்ப்பு எனது உள்ளத்தில் இருப்பதை நான் உணர்கிறேன். இது அவனுடைய அருட்கொடையே ஆகும். (கிதாபுல் பரிய்யா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 13, பக்கம் 195-196, அடிக்குறிப்பு)

இது அல்லாஹ் என் மீது செய்த பெரும் கருணையாகும். அல்லாஹ்வின் நேசரும், அன்பிற்குரிய நபியுமாகிய பெருமானார் (ஸல்) அவர்களை நான் முழுமையாக பின்பற்றக் கூடியவன் ஆவேன்; மேலும் அன்னாரை நேசிக்கக் கூடியவன் ஆவேன்; இதன் காரணமாகவே இவை அனைத்தும் எனக்கு கிடைத்தது; பின்னர் இதன் விளைவாக அல்லாஹ்வின் அன்பின் வாசல்கள் என் மீது திறக்கப்பட்டன; மேலும் அதன் ஞானமும் என்னிடம் உருவானது; பிறகு அல்லாஹ்வின் அருட்களின் மழை என் மீது பொழிந்து கொண்டே சென்றது.

கடந்த குத்பாவில் நான் குறிப்பிட்டிருந்தது போன்று அன்னார் (அலை) இந்த விஷயங்களை பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இதே மனநிலையை குறிப்பிட்டவாறு, அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் ஓர் இடத்தில் எழுதுகின்றார்கள்: மேலும் நல்லடியார்கள் எனது சகோதரர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

اَلْمَسَاجِدُ مَكَانِىْ وَالصَّالِحُوْنَ اِخْوَانِىْ

وَذِكْرُ اللّٰهِ مَالِىْ وَخَلْقُ اللّٰهِ عِيَالِىْ

அதாவது, எனது இல்லம் மஸ்ஜிது ஆகும். நல்லடியார்கள் எனது சகோதரர்கள் ஆவர். அல்லாஹ்வின் நினைவு எனது செல்வமாகும். அவனது படைப்பினம் எனது குடும்பம் ஆகும். (ஹஸ்ரத் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களின் நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 3, பக்கம் 402)

அதாவது இவை அனைத்தும் அல்லாஹ்வை சுற்றியே சுழல்கின்றது என்பதை அன்னார் (அலை) எடுத்துரைத்தார்கள்.

மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**ஒவ்வொரு பொருளையும் அல்லாஹ்விற்காக நேசிக்கிறோம். மனைவியாக இருந்தாலும் சரி; பிள்ளைகளாக இருந்தாலும் சரி; நண்பர்களாக இருந்தாலும் சரி; எல்லாருடனும் நமது தொடர்பு என்பது அல்லாஹ்விற்காக உள்ளது.** (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 423, 2022-ம் ஆண்டு பதிப்பு)

அல்லாஹ் வழங்கிய போதனை இதுவே ஆகும்.

அடுத்து, இந்த போதனையை பரப்புங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்களும் கூறினார்கள். இதன் அதிகமான வெளிப்பாடு இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் செயலின் மூலமாக அமைந்திருக்கின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

உண்மையாளர்களோ சோதனையான நேரத்திலும் உறுதிப்பாட்டுடன் இருக்கின்றனர். இறுதியில் இறைவன் நமக்கே உதவியாளனாக இருப்பான் என்பதை அவர்கள் அறிந்திருக்கின்றனர். அப்படிப்பட்ட முழுமையான நண்பர்கள் கிடைத்ததற்காக இந்த எளியவன் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றான். ஆனால், ஒருவேளை, ஒரு நபர் கூட என்னுடன் இல்லாவிட்டாலும், அனைவரும் என்னை விட்டு விலகி தத்தமது வழியில் சென்றுவிட்டாலும் சரியே; அப்போதும் எனக்கு எவ்வித அச்சமும் இருக்காது. இறைவன் என்னுடன் இருக்கிறான் என்பதை நான் அறிவேன். நான் நசுக்கப்பட்டு, தூள் தூளாக ஆக்கப்பட்டாலும், ஒரு துகளை விட அற்பமானவனாக

ஆக்கப்பட்டாலும், எல்லா தரப்பிலிருந்தும் துன்புறுத்தல்களையும், ஏச்சுபேச்சுகளையும், சாபத்தையும் நான் கண்டாலும் கூட அப்போதும் நானே வெற்றி பெறுவேன்; என்னை எவரும் அறிவதில்லை; ஆனால் அவன் என்னுடன் இருக்கின்றான்; ஒருபோதும் நான் வீணாக்கப்பட மாட்டேன். எதிரிகளின் முயற்சிகள் வீணானவையாகும். பொறாமைப்படுகிறவர்களின் திட்டங்கள் பயனற்றதாகும்.

அறிவற்றவர்களே! பார்வையற்றவர்களே! எனக்கு முன் எந்த உண்மையாளர் வீணாகிப் போனார்? நான் வீணாகி விடுவதற்கு! எந்த உண்மையான விசுவாசியை இறைவன் இழிவுடன் அழித்து விட்டான்? என்னை அவன் அழித்துவிடுவதற்கு!

நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள்! நன்கு காது கொடுத்து கேளுங்கள்! என் ஆன்மா அழியக் கூடிய ஆன்மா அல்ல. எனது இயல்பில் தோல்விக்கான அம்சமே இல்லை. எனக்கு எப்படிப்பட்ட தைரியமும், உண்மையும் வழங்கப்பட்டுள்ளது என்றால், அதற்கு முன் மலைகள் ஒன்றுமற்றவையாகும். நான் எவரையும் பொருட்படுத்துவதில்லை. நான் தனியாக இருந்தேன். மேலும் தனியாக இருந்ததில் நான் அதிருப்தி கொண்டதில்லை. இறைவன் என்னை கை விட்டு விடுவானா என்ன? அவன் ஒருபோதும் என்னை கை விடமாட்டான். அவன் என்னை வீணாக்கி விடுவானா என்ன? ஒருபோதும் வீணாக்க மாட்டான். எதிரிகள் இழிவடைவார்கள்; பொறாமைப்படுபவர்கள் தலை குனிவர். இறைவன் தனது அடியானுக்கு எல்லா களங்களிலும் வெற்றியை வழங்குவான். நான் அவனுடன் இருக்கிறேன்; அவன் என்னுடன் இருக்கின்றான். எந்த விஷயமும் எங்கள் பிணைப்பை உடைக்க முடியாது.

நான் அவனது கண்ணியம் மற்றும் கம்பீரத்தின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்! அவனது மார்க்கத்தின் மகத்துவம் வெளிப்பட வேண்டும் என்பதை விடவும், அவனது கம்பீரம் ஒளிர்வதை விடவும், அவனது குரல் ஓங்குவதை விடவும் விருப்பமான விஷயம் இவ்வுலகிலும், மறுவுலகிலும் வேறு எதுவும் இல்லை. அவனது அருளால் ஒரு சோதனை அல்ல; கோடிக்கணக்கான சோதனைகள் வந்தாலும் நான் அஞ்ச மாட்டேன். சோதனைக் களங்களிலும், துன்பங்களின் காடுகளிலும் எனக்கு வலிமை வழங்கப்பட்டுள்ளது.

ஒரு பாரசீக கவிதையில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

மன் நஃஷ கே ரூஸே ஜங் பீனீ புஷ்தே மன்

ஆன் மனம் காந்தரே மியான் காக் வ கூன் பீனீ ஸரே.

பொருள்; போர் நிகழும் நாளில் நீங்கள் என் முதுகை பார்க்க மாட்டீர்கள். மாறாக நான் யாரென்றால், என் தலை மண் மற்றும், ரத்தத்திற்கு இடையே கிடப்பதை நீங்கள் காண்பீர்கள்.

அன்னார் (அலை) நம்மிடம் கூறுகின்றார்கள்:

இறை நேசத்தில் எனது நிலை இதுவாகும்.

அன்னார் (அலை) ஜமாஅத்தினரை நோக்கி கூறினார்கள்: எனவே ஒருவர் என் அடிச்சுவடுகளை பின்பற்றி நடக்க விரும்பவில்லை என்றால் விலகிச் சென்று விடட்டும்! துன்பங்கள் வரும்; இன்னும் என்னென்ன பயங்கரமான காடுகளையும், முட்கள் நிறைந்த பாதையையும் நான் கடக்க வேண்டி உள்ளது என்பது எனக்கு என்ன தெரியும்? நாம் இறைவனின் வழியில் சோதனைகளைக் கண்டு அஞ்சி விடுவோமா என்ன? நாம் எமது அன்பிற்குரிய இறைவனின் ஒரு சோதனையை விட்டு விலகி விடுவோமா என்ன? ஒருபோதும் முடியாது.

(அன்வாருல் இஸ்லாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 9, பக்கம் 23 - 24)

ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அதில் அல்லாஹ்வின் மீதான நேசம் மற்றும் அவனுடைய மார்க்கத்திற்கான தியாக உணர்வைக் குறித்து குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனக்கு மவ்லவி ஸர்வர் ஷாஹ் ஸாஹிப் (ரலி) கூறினார்கள். இந்த அறிவிப்பை வழங்கினார்கள்; அதாவது எந்த நாட்களில் குர்தாஸ்பூரில் கரம்தீனுடன் வழக்கு இருந்ததோ, மேலும் மாஜிஸ்திரேட் வாய்தா வழங்கியிருந்தாரோ, அப்போது ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) காதியான் வந்திருந்தார்கள். மேலும், வழக்கு விசாரணை தேதிக்கு இரண்டு தினங்களுக்கு முன்னதாக நான் சென்று அங்கு சில சான்றுகளை எடுத்து ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக ஹுஸுர் (அலை) அவர்கள்என்னை குர்தாஸ்பூருக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஏனெனில் அடுத்த விசாரணையில் சான்றுகள் முன்வைக்கப்பட இருந்தன. ஹுஸுர் (அலை) அவர்கள் என்னுடன் ஹாமித் அலீ மற்றும் சமையல்காரர் அப்துர் ரஹீம் அவர்களையும் குர்தாஸ்பூருக்கு அனுப்பினார்கள். நாங்கள் குர்தாஸ்பூர் வீட்டிற்கு சென்றதும், கீழே இருந்து டாக்டர் முஹம்மது இஸ்மாயீல்கான் ஸாஹிப் மர்ஹூம் அவர்களை அழைத்தோம்; அவர்கள் அங்கே இருந்தார்கள்; அவர்கள் கீழ்தளத்திற்கு வந்தார்கள். மேலும் கதவைத் திறந்தார்கள்.

டாக்டர் ஸாஹிப் அவர்கள் நாங்கள் குரல் கொடுத்ததும் நிம்மதியிழந்து கதறி அழ ஆரம்பித்துவிட்டார்கள்; நாங்கள் பலமுறை குரல் கொடுத்தோம். ஆனால், அவர்கள் அதேபோன்று அழுது கொண்டே இருந்தார்கள். இறுதியில் சிறிது நேரம் கழித்து அன்னார் (ரலி) கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கீழே வந்தார்கள். நாங்கள் அன்னாரிடம் காரணம் கேட்டபோது, அன்னார் (ரலி) கூறினார்கள்:

என்னிடம் முஹம்மது உஸேன் முன்ஷீ என்பவர் வந்திருந்தார். இவர் அஹ்மதி அல்லாதவர் ஆவார்; நீதிமன்றத்தில் ஒரு குமாஸ்தாவாக இருந்தார்.

மவ்லவி ஸாஹிப் இவ்வாறு கூறிவந்தார்கள்: மேற்குறிப்பிட்ட முஹம்மது உஸேன் என்பவர் குர்தாஸ்பூர் நீதிமன்றத்தில் ஒரு எழுத்தராக அல்லது ஊழியராக இருந்தார். அவர் ஜமாஅத்திற்கு கடும் எதிர்ப்பாளராக இருந்தார்; அவர் மௌலவி முஹம்மது உஸேன் பட்டாலவியை சந்திக்கக் கூடியவர்களை சார்ந்தவராக இருந்தார்.

எப்படியிருப்பினும், டாக்டர் ஸாஹிப் கூறினார்கள்: அந்த நபர் என்னிடம் கூறினார்.

அதாவது டாக்டர் ஸாஹிப் கீழே வந்தபோது, அன்னார் கூறினார்கள்:

முஹம்மது ஹுஸைன் முன்ஷீ வந்தார்; மேலும், கூறினார்:

இன்றைய நாட்களில் இங்கு ஆரியர்களின் ஒரு கூட்டம் நடந்துள்ளது; மேலும், சில ஆரியர்கள் தங்களது நண்பர்களையும் அந்த கூட்டத்திற்கு அழைத்துச் சென்றனர்; ஆக, இதேபோன்று நானும் அங்கு சென்று விட்டேன்; கூட்டத்தின் நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு, இப்போது பொதுவான நடவடிக்கைகள் முடிந்து விட்டன; பொதுமக்கள் செல்லலாம்; நாங்கள் இப்போது சில தனிப்பட்ட விஷயங்களை பேச இருக்கின்றோம் என்று நிர்வாகம் ஓர் அறிவிப்பு கொடுத்தது. எனவே மற்றவர்கள் அனைவரும் எழுந்து சென்றுவிட்டனர். நானும் செல்லத் தொடங்கினேன். ஆனால், நாம் ஒன்றாக செல்லலாம்; நீங்கள் ஓர் ஓரமாக அமர்ந்து கொள்ளுங்கள் அல்லது வெளியே காத்திருங்கள் என்று எனது ஆரிய நண்பர் கூறினார். எனவே நான் ஒரு பக்கமாக விலகி அமர்ந்து கொண்டேன். முஹம்மது உஸேன் - இவர் அஹ்மதி அல்லாத நபர் ஆவார்; கூறுகின்றார்:

பின்னர் ஆரியர்களில் ஒருவர் எழுந்து, மிர்ஸா ஸாஹிபின் பெயரைக் குறிப்பிட்டு நீதிபதியிடம் இவ்வாறு கூறத் தொடங்கினார்:

இந்த நபர் நமது கடும் எதிரியும், நமது தலைவர் லேக்ராமின் கொலையாளியும் ஆவார்; தற்போது, அவர் தங்கள் கையில் சிக்கியுள்ள இரை ஆவார். ஒட்டுமொத்த சமூகத்தின் பார்வையும் தங்கள் பக்கம் உள்ளது; இந்த இரையை நீங்கள் நழுவ விட்டு விட்டால் நீங்கள் சமூகத்தின் எதிரியாகி விடுவீர்கள்.

அந்த நபர் இவ்வாறு உணர்ச்சியூட்டக் கூடிய வகையில் பேசினார். அதனால், அந்த நீதிபதி கூறினார்:

முடிந்தால் மிர்ஸா ஸாஹிபை மட்டுமல்ல; மாறாக இந்த வழக்கில் அவருடன் இருக்கும் அவரது தோழர்கள் மற்றும் சாட்சிகள் என அனைவரையும் நான் நரகத்திற்கு அனுப்பி விட வேண்டும்; இதுவே ஏற்கனவே எனது எண்ணமாக உள்ளது. ஆனால், இந்த வழக்கு எவ்வளவு புத்திசாலித்தனமாக நடத்தப்படுகிறது என்றால், அதில் கை வைப்பதற்கு இடமேயில்லை; இருப்பினும் இப்போது நான் உறுதியளிக்கிறேன். என்ன நடந்தாலும் சரி! இந்த முதல் விசாரணையிலேயே அவரை நான் நீதிமன்ற நடவடிக்கையின் கீழ் கொண்டு வருவேன்!

மவ்லவி ஸாஹிப் கூறிவந்தார்கள்: அதாவது, நீதிமன்ற நடவடிக்கை என்பதன் பொருளை நீங்கள் புரியாமல் இருக்கலாம்; அதன் பொருள் இதுவாகும்:

அதாவது எந்தவொரு

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

நீதிபதிக்கும் வழக்கின் தொடக்கத்திலோ அல்லது விசாரணையின்போதோ குற்றம் சாட்டப்பட்டவரின் பிணையை மறுத்து சிறையில் அடைக்கும் அதிகாரம் உண்டு என்று முஹம்மது உஸேன் தன்னிடம் கூறியதாக டாக்டர் ஸாஹிப் கூறிவந்தார்கள். மேலும் நான் தங்களின் இயக்கத்தின் கடும் எதிரி ஆவேன் என்பது தங்களுக்கு தெரியும்;

அவர் மவ்லவி முஹம்மது ஹூஸைனுடைய சீடராக இருந்தார்; நமது ஜமாஅத்தின் எதிரியாகவும் இருந்தார்; பெயரும் ஒன்றாக இருந்தது. அவர் கூறினார்:

ஆனால், விஷயம் இதுவாகும். அதாவது, ஒரு மரியாதைக்குரிய குடும்பம் அவமானப்படுவதையும், அழிவதையும் என்னால் பார்க்க முடியாது; குறிப்பாக இந்துக்களின் கைகளால் அவர்கள் அவமானப்படுவதை என்னால் பார்க்க முடியாது; மேலும் .மிர்ஸா ஸாஹிப் குடும்பம் இந்த மாவட்டத்தில் மிகவும் மரியாதைக்குரியதாகும் என்பதை நான் அறிவேன். எனவே நான் உங்களுக்கு இந்த தகவலை எட்ட வைத்து விட்டேன்; நீங்கள் இதற்கு ஏதாவது ஏற்பாட்டை செய்து கொள்ளுங்கள்.

எனது கருத்துப்படி, பின்னர் அவர் தனது எண்ணத்தையும் வெளிப்படுத்தினார். கூறினார்:

அதாவது இரண்டு ஆலோசனைகள் உள்ளன. ஒன்று, இந்த வழக்கை இங்கிருந்து தலைமை நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு முயற்சி செய்யப்பட வேண்டும்.

அந்தக் காலத்தில் உயர்நீதிமன்றம் தலைமை நீதிமன்றம் என்று அழைக்கப்பட்டு வந்தது.

இரண்டாவது, மிர்ஸா ஸாஹிப் அடுத்த விசாரணையில் எப்படியாவது நீதிமன்றத்திற்கு வராமல் இருக்க வேண்டும்; மேலும், மருத்துவ சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

மவ்லவி ஸாஹிப் கூறினார்கள்:

டாக்டர் ஸாஹிப் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தபோது, நாங்கள் அனைவரும் மிகவும் அச்சமடைந்தோம்: மேலும், இப்போதே ஒரு நபரை காதியானுக்கு அனுப்பி ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களுக்கு இந்த விபரங்களை தெரிவித்து விட வேண்டும் என்று முடிவு செய்தோம். அப்போது இரவு நேரமாக இருந்தது. நாங்கள் ஒரு வண்டியை தேடினோம். மாட்டு வண்டி அல்லது குதிரை வண்டியை தேடினோம். பல வண்டிகள் அங்கு இருந்தன. ஆனால், எதிர்ப்பிற்கான உத்வேகம் எந்த அளவுக்கு இருந்தது என்றால், எந்தவொரு குதிரை வண்டிக்காரரும் வரவில்லை. எவருமே வர தயாராக இல்லை. அனைவரும் மறுத்தனர். நான்கு மடங்கு அதிக வாடகை தருவதாக கூறியும் எந்த சவாரியும் வர முன் வரவில்லை. இறுதியில், நாங்கள் ஷேக் ஹாமித் அலீ ஸாஹிப், அப்துர் ரஹீம் சமையல்காரர் மற்றும் மூன்றாவது ஒரு நபர் என அவர்களை கால்நடையாக அனுப்பி வைத்தோம். அவர்கள் அதிகாலை தொழுகைக்கான நேரத்தில் காதியான் சென்றடைந்தார்கள். மேலும், அவர்கள் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களிடம் மிகவும் சுருக்கமாக கூறினர்.

அப்போது, ஆகட்டும்! நாம் பட்டாலா செல்வோம் என்று ஹுஸூர் அன்வர் (அலை) அவர்கள் எவ்வித பதற்றமும் இன்றி கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அவர்களிடம் கூறினார்கள்:

காஜா ஸாஹிப் மற்றும் மௌலவி முஹம்மது அலி ஸாஹிப் ஆகியோர் லாஹூரிலிருந்து திரும்பி வரும்போது நம்மை அங்கு சந்திப்பார்கள்;

காஜா ஸாஹிப் மற்றும் மௌலவி முஹம்மது அலி ஸாஹிப் ஆகியோர் லாஹூரிலிருந்து அங்கு வருகின்றார்கள்; அங்கேயே சந்திப்பு நிகழும்; அவர்களிடத்தில் நாம் வழக்கை மாற்றம் செய்வது தொடர்பாக கூறப்பட்ட இந்த விஷயத்தை குறிப்பிடுவோம்; வழக்கை மாற்றுவதற்கான முயற்சி என்னவானது? என்பது அங்கு நமக்கு தெரிய வரும்.

நீதிபதியிடம் ஒருபக்க சார்பு இருப்பதை உணர்ந்து கொண்டு, நம்முடைய வழக்குரைஞர்கள் ஏற்கனவே வேறொரு நீதிமன்றத்திற்கு வழக்கை மாற்றுவதற்கு சீஃப் கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்திருந்தார்கள்.

ஆக, அதே நாளன்று ஹுஸூர் (அலை) அவர்கள் பட்டாலா சென்றடைந்தார்கள். வண்டியில் மௌலவி முஹம்மது அலி ஸாஹிப் மற்றும் காஜா ஸாஹிப் ஆகியோரும் இணைந்து விட்டனர். வழக்கை இடமாற்றம் செய்யும் முயற்சி வெற்றி பெறவில்லை என்ற தகவலை அவர்கள் வழங்கினர். தலைமை நீதிமன்றத்தில் வழக்கை மாற்றம் செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனுவில் வெற்றி கிடைக்கவில்லை.

பின்னர் ஹஸ்ரத் ஸாஹிப் குர்தாஸ்பூர் சென்று விட்டார்கள். மேலும் வழிப்பாதையில் காஜா ஸாஹிப் மற்றும் மௌலவி முஹம்மது அலி ஸாஹிப் ஆகியோருக்கு இந்த சம்பவத்தை பற்றி எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை. கிடைத்த அந்த தகவல் என்ன? என்பது குறித்து அன்னார் (அலை) எந்த விஷயத்தையும் கூறவில்லை.

அன்னார் (அலை) குர்தாஸ்பூர் வீட்டில் எங்கு தங்க இருந்தார்களோ, அந்த வீட்டை அடைந்தபோது, வழக்கத்திற்கு ஏற்ப ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனி அறையில் கட்டிலுக்கு சென்று விட்டார்கள்; சென்றுபடுத்தார்கள்.

ஆனால், மவ்லவி ஸாஹிப் கூறுகின்றார்கள்:

இனி என்ன நடக்குமோ! நீதிபதி ஒரு பெரும் உறுதியான வாக்குறுதி அளித்திருக்கின்றாரே! என்று எண்ணி அந்த நேரத்தில் எங்கள் உடல் மெய்சிலிர்த்தது. சிறிது நேரம் கழித்து ஹுஸூர் (அலை) அவர்கள் என்னை- அதாவது, மவ்லவி ஸாஹிபை அழைத்தார்கள்.

கூறுகின்றார்கள்: நான் உள்ளே சென்றபோது, ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள், தமது இரு கைகளையும் சேர்த்து தமது தலைக்கு அடியில் வைத்திருந்தார்கள்; மேலும் மல்லாக்காக படுத்திருந்தார்கள்; (நேராக படுத்திருந்தார்கள்). நான் சென்றதால், ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) ஒருக்கணித்து படுத்துக் கொண்டு, ஒரு பக்கமாக உள்ளங்கையை தலையில் முட்டுக் கொடுத்துக் கொண்டு படுத்துக் கொண்டார்கள். மேலும், என்னிடம் கூறினார்கள்: என்ன நடந்தது? என்று அந்த முழு சம்பவத்தை பற்றியும் நான் முழுமையாக கேட்டறிவதற்காக உங்களை நான் அழைத்துள்ளேன்.

அந்த நேரத்தில் அறையில் வேறு எந்த நபரும் இருக்கவில்லை. மேலும் வாசலில் மட்டும் மியான் ஷாதி கான் நின்று கொண்டிருந்தார்கள். எவ்வாறு நாங்கள் இங்கு வந்து, டாக்டர் இஸ்மாயீல் கான் ஸாஹிப் அவர்களை அழுதவாறு கண்டோம் என்று நான் முழு சம்பவத்தையும் எடுத்துரைத்தேன்.

பின்னர், டாக்டர் ஸாஹிப், அவர்கள் முன்ஷீ முஹம்மது ஹுஸைனுடைய வருகையை பற்றிய சம்பவத்தை குறித்து என்ன எடுத்துரைத்தார்கள்? என்பதையும், பின்னர் முஹம்மது ஹுஸைன் என்ன சம்பவத்தை கூறினார்? போன்ற அந்த அனைத்து சம்பவங்களையும் கூறினேன். ஹுஸூர் (அலை) அவர்கள் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார்கள். இரை என்ற வாசகத்தை நான் அடைந்தபோது- அதாவது, இரை என் கையில் இருக்கிறது என்று அவன் கூறிய வாசகத்தை நான் கூறியபோது, சட்டென ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் எழுந்து அமர்ந்து விட்டார்கள். அவர்களின் கண்கள் பிரகாசம் அடைந்தன. முகம் சிவந்து விட்டது.

**மேலும் அன்னார் (அலை) கூறினார்கள்: நான் அவனது இரையா? நான் இரையல்ல; நான் சிங்கமாவேன்; அதுவும் இறைவனின் சிங்கம் ஆவேன்; இறைவனின் சிங்கத்தின் மீது அவர் கை வைக்க முடியுமா? அப்படி செய்துதான் பார்க்கட்டுமே!**

இந்த வார்த்தைகளை கூறும்போது, ஹுஸூர் (அலை) அவர்களின் குரல் எவ்வளவு உயர்ந்து விட்டது என்றால், அறையின் வெளியே இருந்தவர்களும் திடுக்கிட்டு, வியப்புடன் அறையின் பக்கம் கவனம் செலுத்தி விட்டனர். ஆயினும், அறையினுள் எவரும் வரவில்லை. ஹுஸூர் (அலை) பலமுறை இறைவனின் சிங்கம் என்ற வார்த்தையை கூறினார்கள். மேலும் எப்போதும் பாதி மூடிய நிலையில் இருந்து வந்த அன்னாரின் கண்கள் அன்று சிங்கத்தின் கண்களை போல் அகல விரிந்து கனலாக தகித்துக் கொண்டிருந்தன. மேலும் அன்னாரின் முகம் எவ்வளவு சிவந்திருந்தது என்றால், (நேருக்கு நேர்) பார்க்க முடியாமல் இருந்தது.

விஷயத்தை கூறிய பிறகு அன்னார் (அலை) கூறினார்கள்:

நான் என்ன செய்வது? நானோ இறைவனுக்கு முன்னால் சமர்ப்பித்து விட்டேன். நான் உனது மார்க்கத்திற்காக என் கை மற்றும் கால்களில் விலங்குகளை அணிவதற்கு தயாராக இருக்கின்றேன்; அதாவது எனக்கு கைவிலங்கு போடப்பட்டால் அதனால் எந்த சிக்கலும் இல்லை. கைவிலங்கு அணிவதற்கு தயாராக இருக்கின்றேன்; அதனால் எதுவும் ஆகிவிடாது. இன்னும்கூறப்போனால், அதனால் எனக்கு எதுவும் ஆகிவிடாது என்று கூறினேன்.

ஆனால், அவன் கூறுகின்றான்: அதாவது அல்லாஹ் கூறுகிறான்: இல்லை! நான் உம்மை இழிவிலிருந்து பாதுகாப்பேன்; மேலும், உம்மை கண்ணியத்துடன் விடுவிப்பேன்.

அடுத்து, அன்னார் (அலை) இறை நேசத்தை பற்றி உரை நிகழ்த்தினார்கள். சுமார் அரை மணி நேரம் வரை நேசம் குறித்து உத்வேகத்துடன் அல்லாஹ்வின் மீதான அன்பைக் குறித்து கூறிக் கொண்டிருந்தார்கள்.

(ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, அறிவிப்பு எண்: 107)

அல்லாஹ்வின் மீதான அன்பு மற்றும் நேசத்தில் தியாகத்தின் ஒரு விநோதமான சிந்தனையாகும். அல்லாஹ்வின் மீது அன்னாருக்கு எவ்வளவு நம்பிக்கை இருந்தது! அல்லாஹ்வின் இருப்பின் மீதான இந்த நம்பிக்கை என்பது இறை நேசத்தின் விளைவாக இருந்தது. நான் அல்லாஹ்வை நேசிக்கின்றேன்; மேலும் அவனுக்காக எல்லா வகையான தியாகங்களுக்கும் நான் தயாராக இருக்கின்றேன். எனவே அல்லாஹ் என்னை வீணாக்கி விட மாட்டான் என்ற உறுதியான நம்பிக்கை அன்னாருக்கு இருந்தது.

இதே போன்ற மற்றுமொரு சம்பவம் உள்ளது. ஒரு முறை, பண்டித் லேக்ராம் கொலை செய்யப்பட்ட சந்தேகத்தின் பெயரில் காவல்துறை கண்காணிப்பாளர் லீமார் சந்த் தனது காவலர்களின் படையுடன் திடீரென காதியானுக்கு வந்தார். மேலும், இது குறித்து ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு தகவல் கிடைத்தபோது அன்னார் (ரலி) கடும் பதற்றத்தின் நிலையில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். மேலும், போலீஸ் கண்காணிப்பாளர் பிடி ஆணையுடன் கைவிலங்குடன் வந்து கொண்டிருக்கிறார் என்று நடுங்கிய குரலில் கூறினார்கள். அந்த நேரத்தில் அன்னார் (அலை) தமது நூருல் குர்ஆன் என்ற நூலை எழுதிக் கொண்டிருந்தார்கள். தலையை உயர்த்தி புன்னகையுடன், மீர் ஸாஹிப்! மக்கள் ஆனந்தத்தில் தங்கம் மற்றும் வெள்ளிக் காப்புகளை அணிகின்றனர்; எனவே நாமோ அல்லாஹ்வின் வழியில் இரும்பு விலங்குகளை அணிந்து கொண்டோம்! என்று புரிந்துக் கொள்வோம். பின்னர், சிறிதுநேரம் அமைதிக்கு பிறகு, ஆனால் அப்படி நடக்காது; ஏனென்றால் இறைவனின் அரசாங்கத்திற்கு சில திட்டங்கள் உள்ளன; அவன் தனது பிரதிநிதிகளையும் தூதர்களையும் அவ்வாறு அவமானப்படுத்துவதில்லை என்று அன்னார் (அலை) கூறினார்கள்.

ஆக, அப்படியே நடந்தது; அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. (அல்ஹகம், தொகுதி 39, ஜூன் 7, 1936,பக்-3)

ஒருமுறை ஜலந்தர் என்ற இடத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்: சோதனை காலங்களில் நமது ஜமாஅத்தின் சில பலவீனமான உள்ளம் படைத்தவர்களைக் குறித்து அச்சம் ஏற்படுகிறது.

அதாவது, ஜமாஅத்தின் பலவீனமான உள்ளம் கொண்டவர்கள் இருக்கின்றனர்; அவர்களைப் பற்றிய கவலை எனக்கு உள்ளது.

அதாவது, சோதனைகளோ வந்து கொண்டுதான் இருக்கின்றன; வழக்குகளும் பதியப்படுகின்றன; மேலும் அன்னார் மற்றும் அன்னாரின் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு எதிர்ப்புகளும் ஏற்பட்டு வந்தன. அதுபோன்ற நேரத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்:

நமக்கு நமது ஜமாஅத்தின் சில பலகீனமான உள்ளம் கொண்டவர்கள் தொடர்பாக அச்சம் ஏற்படுகிறது.

சில பலவீனமான ஈமான் கொண்டவர்கள் தொடர்பாக கவலை ஏற்படுகிறது.

அடுத்து, அன்னார் (அலை) கூறினார்கள்:

எனது நிலை என்னவென்றால், நீ நிராகரிக்கப்பட்டு விட்டாய்; மேலும் உனது எந்த நோக்கத்தையும் நாம் பூர்த்தி செய்ய மாட்டோம் என்று தெளிவாக ஓசை வந்தாலும், இறைவன் மீது ஆணையாக! இந்த அன்பு, நேசம் மற்றும் மார்க்கத் தொண்டில் எந்த குறைவும் ஏற்படாது.

அப்பொழுதும் நான் அல்லாஹ்வை விட்டு விலக மாட்டேன். நேசம் குறையாது; ஏனென்றால் நான் அவனை கண்டுவிட்டேன். (ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் ஸாஹிப் ஸியால்கோட்டி (ரலி) அவர்களின் நூல், ஸீரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பக்கம் 53)

எனக்கோ அல்லாஹ்வின் மீது நம்பிக்கையும், உறுதியும் இருக்கின்றது. என்ன ஆனாலும் சரி! எனது அன்பில் எவ்விதக் குறைவும் ஏற்படாது.

இதேபோன்று நவாப் முபாரகா பேகம் ஸாஹிபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

கூறுகின்றார்கள்:

எல்லாவற்றுக்கும் அதிகமாக நேசத்திற்குரியவனான அந்த இறைவனின் மீதான அன்பானது அன்னாரின் உடல் மற்றும் ஆன்மாவின் ஒவ்வொரு அணுவிலும் பாய்ந்து கொண்டிருந்தது. அன்னாருடைய ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் அது எந்நேரமும் வெளிப்பட்டு வந்தது. நான் தொழுகைக்கான நேரங்கள் அல்லாத மற்ற நேரங்களிலும் கூட தமது இறைவனை துடிதுடித்து அன்னார் (அலை) அழைத்ததை நான் கண்டுள்ளேன்.

தொழுகை நேரத்தில் மட்டுமல்ல; மாறாக சாதாரண நேரங்களிலும் கூட துடிதுடித்து துஆ செய்வதை பார்த்துள்ளேன். அன்னார் (அலை) என்ன கூறி வந்தார்கள்! அன்னார் (அலை) கூறினார்கள்:

எனது நேசத்திற்குரிய அல்லாஹ்வே! எனது நேசத்திற்குரிய அல்லாஹ்வே! எனது நேசத்திற்குரிய அல்லாஹ்வே! என்று அன்னார்(அலை) கூறுவார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

நான் இப்பொழுதும் கூட அதைக் கேட்கிறேன். என்னுடைய காதுகளில் அந்த சப்தம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அன்னாரின் கண்ணீர் வடிவதை காண்கிறேன். இந்தக் காட்சி எனக்கு முன்னால் இருக்கிறது. அவர்கள் அந்த தருணத்தில் ஒரு காட்சியை சித்திரமாக வடித்துள்ளார்கள்.

அன்னார் (அலை) தமது ஆதியும், அந்தமுமாகிய இறைவனுக்காக தன்மானத்தை வெளிப்படுத்திய ஒரு முன்மாதிரியை கண்கூடாக கண்ட காட்சியை அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

இது நான் கண்ட அன்னாரின் துஆவினுடைய நிலையாக இருந்தது. ஒரு சம்பவத்தையும் எடுத்துரைக்கிறேன். எழுதுகிறார்கள்:

அன்னார் (அலை) அறையில் இருந்தார்கள். வெளியே செல்வதற்கு ஆயத்தமாக இருந்தார்கள். எங்கோ வெளியே செல்ல வேண்டி இருந்தது. நான் அன்னாருக்கு அருகாமையில் இருந்தேன். எங்களுடைய பெரியம்மாவின் சிறப்புப் பணிப்பெண் ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்களிடத்தில் வந்தார். (அநேகமாக அந்தப் பணிப் பெண் பெரியம்மாவோடு சேர்ந்து அஹ்மதி ஆகியிருந்தார்; மேலும் பஹஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்); ; தன் புறமிருந்து உறவினராகக் கருதி, மிர்ஸா இமாமுத்தின் மரணத்திற்கு அன்னாரிடம் இரங்கல் தெரிவித்து




கொண்டிருந்தார். அவருடைய வாயிலிருந்து படா ஹி சங்கா பந்தா ஸி என்ற சொற்கள் வெளிவந்தன. பஞ்சாபியில் கூறினார். (அதாவது மிர்ஸா இமாமுதீன் மிகவும் நல்ல மனிதராக இருந்தார் என்பது அதன் பொருளாகும்)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அறையை விட்டு வெளியே வந்தார்கள். மேலும் அன்னாருடைய முகம் சிவந்து கொண்டிருந்தது. மேலும் அன்னார் (அலை) தமது கைத்தடியை தரையில் அடித்துக் கூறினார்கள்:

நற்பேறு இழந்த பெண்மணியே! நீ எனது வீட்டில் எனது இறைவனின் எதிரியை புகழ்கின்றீர்;

மிர்ஸா இமாமுத்தீன் ஸாஹிபோ இஸ்லாத்தை விட்டு வெளியேறியவராக இருந்தார். மேலும் அல்லாஹ்வை ஏளனம் செய்து வந்தார். எனவே தமது வீட்டில் அமர்ந்து கொண்டு, அவரை நினைவுகூர்வதை அன்னாரின் தன்மானம் பொறுத்துக் கொள்ளவில்லை.

நவாப் முபாரகா பேகம் ஸாஹிபா எழுதுகின்றார்கள்: அன்னாரின் குரலில் எப்படிப்பட்ட ஒரு கம்பீரம் இருந்தது என்றால், அந்தப் பெண் உடனடியாக அங்கிருந்து ஓட்டம் பிடித்து விட்டார். மிர்ஸா இமாமுத்தீன் ஸாஹிப் நாத்தீகராக இருந்தார். தமது வீட்டில் ஒரு நாத்தீகரை இந்த அளவு புகழ்பாடுவதை அன்னாரால் எவ்வாறு சகித்துக் கொள்ள முடியும்? (தஹ்ரீராதே முபாரகா, பக்கம் 223 - 224)

தமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை பின்பற்றுதலில் இளமைப் பருவம் முதலே அன்னார் (அலை) இறைநேசத்தில் தமது நேரத்தைக் கழித்தார்கள்.

ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஒரு சீக்கிய ஜமீன்தாரின் வாக்குமூலம் ஆகும். அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எங்களது தந்தைவழிப் பாட்டனார் தரப்பிலிருந்து பணி தொடர்பான ஒரு தூதுச் செய்தியை கொண்டு வந்து கொடுத்தார்; கூறுகிறார்:

ஒருமுறை ஒரு பெரிய அதிகாரி அல்லது தலைவர் எங்களது தந்தைவழிப் பாட்டனாரிடம், உங்களுக்கு ஓர் இளைய மகனும் உள்ளார் என்று நான் கேள்விப் பட்டுள்ளேன்; ஆனால் நான் அவரை பார்த்ததே இல்லையே? என்று கேட்டார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தந்தை

புன்னகைத்தவாறு கூறினார்கள்:

ஆம்! எனக்கு ஓர் இளைய மகனும் இருக்கின்றார்தான்; ஆனால், அவர் ஒரு புதிதாக திருமணமான மணப்பெண்ணைபோன்று அரிதாகவே தென்படுவார்; நீங்கள் அவரை பார்க்க விரும்பினால் மசூதியின் ஏதேனும் ஒரு மூலையில் சென்று பார்த்துக் கொள்ளுங்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்களின் நூல், ஸீரத்தே தய்யிபா, பக் 9 - 10)

இந்த அறிவிப்பை மிஃராஜுத்தீன் ஸாஹிப் உமர் அவர்களும் மேலும் விளக்கமாக எழுதியுள்ளார்கள்:

அன்னாரின் தந்தை கூறினார்கள்: நீங்கள் பள்ளிவாயிலுக்கு சென்று உளூ செய்யும் இடத்திற்கு அருகில் அவரை தேடுங்கள். தண்ணீர் கிடங்கு உள்ளது. அங்கு சென்று தேடுங்கள்; அங்கு கிடைக்கவில்லை என்றால் ஏமாற்றம் அடைந்து திரும்பி விடாதீர்கள்; பள்ளிவாசலுக்கு உள்ளே சென்று ஏதேனும் மூலையில் தேடுங்கள்; அங்கேயும் இல்லை என்றால், மனம் தளரவேண்டாம்; அங்கு சுருட்டி வைக்கப்பட்டு இருக்கக்கூடிய ஏதேனும் விரிப்பில் பாருங்கள்! ஏனென்றால், அவர் உயிரோடு இருக்கும்போதே மரணித்தவர் ஆவார்; ஏனென்றால் அல்லாஹ்விடம் தம்மை மாய்த்துக் கொள்வதில் நிலைமை இந்த அளவிற்கு ஆகிவிட்டது. அதாவது, எவரேனும் அவரை பாயில் வைத்து சுருட்டிவிட்டாலும் அவர் எந்த அசைவையும் வெளிப்படுத்த மாட்டார். அவருக்கு அது கூட தெரிய வராது.

(மிஃராஜுத்தீன் உமர் ஸாஹிப் அவர்களின் நூல், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு)

இதே போன்று மற்றொரு சம்பவத்தை மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். எழுதுகின்றார்கள்:

என்னிடம் ஹாஜி அப்துல் மஜீத் ஸாஹிப் லூதியானவி அவர்கள் கூறினார்கள்:

ஒரு முறை ஹுஸுர் (அலை) அவர்கள் லூதியானாவில் இருந்தார்கள். எனது வீட்டில் ஒரு வேப்பமரம் இருந்தது. மழைக்காலமாக இருந்ததால் அதன் இலைகள் மிகவும் அழகான ரீதியில் பசுமையாக இருந்தன. ஹுஸுர் (அலை) என்னிடம் கூறினார்கள்: ஹஸ்ரத் ஸாஹிப் இந்த மரத்தின் இலைகளை பாருங்கள் ; இவை எவ்வளவு அழகாக இருக்கின்றன.

ஹாஜி ஸாஹிப் கூறுகின்றார்கள்: நான் அப்போது பார்த்தபோது, அன்னாரின் கண்கள் கண்ணீரால் நிறைந்திருந்தன. (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, அறிவிப்பு எண்: 95)

அல்லாஹ்வின் வல்லமையையும், அவனது அன்பும் அன்னாருக்கு நினைவிற்கு வந்துவிட்டது. அதன் காரணமாக அன்னாரின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இங்கு ஒரு நபர் இருந்தார். அவர் பிற்காலத்தில் மிகவும் தூய அஹ்மதியாக ஆகிவிட்டார். ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களுடன் அந்த நபருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. ஆனால் அஹ்மதி ஆகுவதற்கு முன்பு ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் அந்த நபர் மீது 20 ஆண்டுகள் வரை கோபமுற்றிருந்தார்கள். அதற்கு காரணம் இதுவாக இருந்தது. அதாவது அந்த நபர் கூறிய ஒரு விஷயம் அன்னாரது உள்ளத்தில் ஒரு இறுக்கத்தை ஏற்படுத்திவிட்டது. அது இவ்வாறாகும். அதாவது அந்த நபரின் ஒரு மகன் இறந்துவிட்டார். ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் தமது சகோதரருடன் துக்கம் விசாரிப்பதற்காக அவரிடம் சென்றார்கள். இரங்கல் தெரிவித்தார்கள். அந்த மக்களிடம் இந்த வழக்கம் இருந்தது. அதாவது (இதுபோன்ற தருணங்களில்) ஒரு நபர் வந்தால், மேலும் அவருடன் மிகவும் நட்பு ரீதியிலான தொடர்பு இருந்தால், பின்னர் அவரை ஆரத் தழுவிக் கொண்டு சப்தமாக அழுவார்கள். அந்த வழக்கத்தின்படி அவர் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களின் மூத்த சகோதரரை ஆரத் தழுவிக் கொண்டு அழுதவாறு, அல்லாஹ் என் மீது பெரும் அநீதி இழைத்து விட்டான் என்று கூறினார்.

இதைக் கேட்டவுடன் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களுக்கு அந்த நபர் மீது எவ்வளவு வெறுப்பு ஏற்பட்டு விட்டது என்றால், அவரின் முகத்தைக் கூட அன்னார் (அலை) பார்க்க விரும்பவில்லை. பிற்காலத்தில் அல்லாஹ் அவருக்கு நற்பேறு வழங்கி விட்டான். அந்த நபர் அத்தகைய அறியாமையிலிருந்து விடுபட்டார். (தக்தீரே இலாஹி, அன்வாருல் உலூம், தொகுதி 4, பக் - 606 - 607)

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

இதேபோன்று, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் மற்றொரு அறிவிப்பை எடுத்துரைத்துள்ளார்கள்.

கூறுகின்றார்கள்: கபூர்தலாவைச் சார்ந்த முன்ஷீ ஸஃபர் அஹ்மது ஸாஹிப் அவர்கள் எனக்கு எழுத்து மூலம் தெரிவித்ததாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு ஒருமுறை கடுமையான தலைச்சுற்றல் நோய் இருந்தது. தலைச்சுற்றல் தொந்தரவு இருந்தது. ஒரு மருத்துவரைக் குறித்து, அவர் இதில் சிறப்பு புலமை பெற்றிருக்கின்றார்; இந்த நோய்க்கு சிகிச்சை அளிக்கின்றார் என்று கூறப்பட்டது. அவருக்கு பயணம் மற்றும் இதர செலவுகளுக்காக பணம் அனுப்பி வெகு தொலைவில் இருந்து அவர் வரவழைக்கப்பட்டார். அவர் அன்னாரை பார்த்துவிட்டு, இரண்டு நாட்களில் நான் தங்களை குணப்படுத்தி விடுவேன் என்று கூறினார்.

இதைக் கேட்டவுடன், ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் உள்ளே சென்றுவிட்டார்கள். மேலும் ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு ஒரு துண்டுச் சீட்டில் இவ்வாறு எழுதி அனுப்பினார்கள்: இந்த நபரிடம் நான் சிகிச்சை பெற விரும்பவில்லை; இவர் இறைத்தன்மைக்கான வாதம் புரிகின்றார். (அதாவது தானே குணப்படுத்தி விடுவேன் என்று அவர் கூறுகிறார்) இவருக்கு திரும்பிச் செல்வதற்கான பயண செலவும், கூடுதலாக 25 ரூபாய் கொடுத்து அனுப்பி விடுங்கள். தன்னிடமிருந்து சிலவற்றை அனுப்பி வைத்து, இதனை அவருக்கு கொடுத்து விடுங்கள்; மேலும் அவரை அனுப்பி வைத்து விடுங்கள்.

ஆக, அவ்வாறே செய்யப்பட்டது.

அன்னார் (அலை) கூறினார்கள்: நான் குணப்படுத்துவேன் என்று இவர் கூறுகின்றார். அல்லாஹ்வைத் தவிர குணப்படுத்துபவர் வேறு யார் இருக்கின்றார்? உண்மையான குணம் அளிப்பவனோ அல்லாஹ் மட்டுமே ஆவான்.

(ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 2, அறிவிப்பு எண்:1038)

இதேபோன்று, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் கபூர்தலாவைச் சார்ந்த முன்ஷீ ஸஃபர் அஹ்மது ஸாஹிப் அவர்களுடைய மற்றொரு அறிவிப்பை எடுத்துரைத்துள்ளார்கள்:

சவ்திரி ருஸ்தம் அலீ கான் ஸாஹிப் மர்ஹூம் ரயில்வே ஆய்வாளராக இருந்தார்கள். அவருக்கு மாதம் 150 ரூபாய் சம்பளம் வாங்கி வந்தார்கள். மிகவும் தூயவராகவும், நமது ஜமாஅத்தில் நினைவு கூறத் தக்க நபராகவும் இருந்தார். அவர் மாதம் 20 ரூபாயை தம்மிடம் வைத்துக் கொண்டு, மீதி மொத்த ஊதியத்தையும் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களுக்கு அனுப்பி வைத்து வந்தார்கள். எப்போதும் இதுவே அன்னாரின் வழக்கமாக இருந்தது. அன்னாருக்கு ஒரு மகன் மட்டுமே இருந்தார்; அவர் நோய்வாய்ப்பட்டபோது அவரை காதியானுக்கு தமது மனைவியுடன் அழைத்து வந்தார்கள். மேலும், ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வீட்டில் தங்கினார்கள்.

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் ஒருநாள் கூறினார்கள்:

நான் இரவில் கனவு கண்டேன்; ஒருவர் இறைவனை ஏசிபேசுகின்றார். அது எனக்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டது. அன்னார் (அலை) இந்தக் கனவை குறிப்பிட்டபோது, மறுநாளே சவ்திரி ஸாஹிபின் மகன் இறந்துவிட்டான். ஒரே மகனாக இருந்தான். அதனால் அவனுடைய தாய் மிகுந்த வேதனையில் அழுது புலம்பினார். மேலும், இந்நிலையில் அவரது வாயிலிருந்து, அநியாயக்காரனே! என் மீது பெரும் அநீதி இழைத்து விட்டாய்! என்ற கூற்று வெளிவந்தது.

அதாவது அவர் இறைவனை நோக்கி இவ்வாறு கூறினார்.

அவர் கூறிக் கொண்டிருந்த இப்படிப்பட்ட சொற்களை ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் செவிமடுத்து விட்டார்கள். அப்போதே அன்னார் (அலை) வெளியே வருகை தந்தார்கள். மேலும் அன்னாருக்கு மிகவும் வேதனை அளித்தது. மேலும், மிகுந்த ஆவேசத்துடன் இப்போதே இந்த ஆணும், பெண்ணும் எனது வீட்டை விட்டு வெளியேறி விடட்டும் என்று கூறினார்கள்.

டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயில் ஸாஹிப் (ரலி) அவர்களின் தாயார் மிகவும் புத்திசாலி பெண்மணியாகவும், புரிதல் மிக்கவராகவும் இருந்தார்கள். அவர்கள் சவ்திரி ஸாஹிபின் மனைவிக்கு புரிய வைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் ஸாஹிப் மிகவும் கோபமாக இருக்கிறார்கள் என்று கூறினார்கள். அவர் தவ்பா செய்தார். பிறகு மன்னிப்பும் கேட்டார். நான் இனி அழவும் மாட்டேன் என்று கூறினார். மீர் ஸாஹிப் அவர்களுடைய தாயார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (ரலி)

அவர்களிடம் வந்து, இப்பொழுது அவரை மன்னித்து விடுங்கள்; அந்தப் பெண்மணி தவபா செய்கிறார்; அழுது புலம்புவதையும் நிறுத்திவிட்டார் என்று கேட்டுக் கொண்டார்கள். சரி! அவர் (இங்கு) இருக்கட்டும்! அந்த சிறுவனின் இறுதிச்சடங்குக்கான ஏற்பாடுகளை செய்யுங்கள் என்று ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் கூறினார்கள்.

(ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 2, அறிவிப்பு எண்: 1119)

ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாழ்வின் தாக்கங்களை எழுதியவாறு எடுத்துரைக்கின்றார்கள். இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தாக்கங்கள் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இர்ஃபானீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சொந்த வார்த்தைகளில் எழுதியுள்ளார்கள்:

அன்னார் (அலை) கூறினார்கள்: டல்ஹவ்ஸிக்கு செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம், மலைகளின் பசுமையான பகுதிகள் மற்றும் ஓடும் நீரோடைகளைக் கண்டு, தானாகவே இறைவனை துதிக்கும் உணர்வு உள்ளத்தில் உருவாகிவிடும்; மேலும் இறைவணக்கத்தில் ஒரு தனி இன்பம் கிடைத்து விடும். தனிமையில் இருப்பதற்கு அங்கு நல்ல வாய்ப்பு கிடைப்பதை நான் கண்டுள்ளேன். (ஹயாத்தே அஹ்மது, தொகுதி 1, பக்கம் 85)

இதேபோன்று இன்பம் மற்றும் இறை நேசம் பற்றி குறிப்பிட்டவாறு ஓர் இடத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்:

இறை சந்திப்பின் மூலம் வளர்கின்ற ஒரு புத்தம் புதிய இறை நேசமானது அவர்களின் உள்ளத்தில் வைக்கப்படுகின்றது. அவர்களை அதாவது அல்லாஹ்வை நேசிக்கக் கூடியவர்களை துன்பங்களின் ஆட்டுரலில் அரைத்தாலும், அவர்களை கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கி பிழிந்து எடுத்தாலும், இறை நேசம் எனும் சாறைத் தவிர வேறு எதுவும் வராது. (ஸுர்மஃ சஷ்மா ஆரியா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 2, பக் 79- அடிக்குறிப்பு)

அல்லாஹ்வை நேசிப்பவர்களுடைய உள்ளத்தில் எப்படிப்பட்ட நேசம் இருக்கிறது என்றால், அவர்களை அரைப்பதற்கான ஆட்டுரலில் அரைத்தாலோ அல்லது கிரைண்டரில் வைத்து அரைத்தாலோ, அல்லது அவர்களை பிழிந்து அதன் சாறு எடுக்கப்பட்டால் அல்லது ஏதாவது சித்திரவதைக்கு ஆளாக்குங்கள். ஆனால், அங்கு இறை நேசத்தைத் தவிர வேறு எதுவும் உங்களுக்கு தென்படாது.

மற்றோர் அறிவிப்பில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்:

ஸாஹிப்ஸாதா முபாரக் அஹ்மது ஸாஹிப் மர்ஹூம் நோய்வாய்ப்பட்டிருந்தபோது, அவர்களைக் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அச்சம் மற்றும் கவலை இருந்து வந்தது. ஸாஹிப்ஸாதா மரமணடைந்து விட்டபோது, ஸர்தார் ஃபஸ்ல் ஹக் ஸாஹிப் மற்றும் டாக்டர் இபாதுல்லாஹ் ஸாஹிப் மர்ஹூம் மற்றும் ஒரு நபர் இரங்கல் தெரிவிக்கும் எண்ணத்துடன் காதியான் வந்தார்கள். ஆனால், ஹுஸுர் (அலை) அவர்கள் மஸ்ஜிதிற்கு வந்தபோதோ, ஹுஸுர் (அலை) அவர்கள் வழக்கம்போல், இன்னும் கூறப்போனால், கூடுதல் மகிழ்ச்சியுடன் எங்களுக்கு காணப்பட்டார்கள். அன்னாரின் மர்ஹூம் மகனின் மரணம் குறித்த பேச்சு வந்தபோதோ அன்னார் (அலை) அவர்கள் கூறினார்கள்:

முபாரக் அஹ்மது மரணித்து விட்டான். எனது இறைவனின் விருப்பம் நிறைவேறிவிட்டது. இவர் பிறப்பதற்கு முன்பே இந்த சிறுவன் ஒன்று, விரைவில் மரணித்து விடுவார் அல்லது மிகவும் இறை நேசராக இருப்பார் என்று அவன் எனக்கு கூறியிருந்தான். எனவே அல்லாஹ் அவனை அழைத்துக் கொண்டான். ஒரு முபாரக் அல்ல; ஆயிரமே இறந்தாலும் ஆனால் எனது இறைவன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அவனது விருப்பம் நிறைவேற வேண்டும்; அதில்தான் எனது மகிழ்ச்சி உள்ளது.

இந்த நிலையைக் கூறுகின்றனர்: நாங்களோ துக்கம் விசாரிப்பதற்காக சென்றிருந்தோம். எங்களில் எவருக்கும் இரங்கல் தெரிவிப்பதற்கு துணிச்சல் வரவில்லை. (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 2, அறிவிப்பு எண்: 1191)

ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் ஸாஹிபா (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

அல்லாஹ்வின் மீது அவர்கள் கொண்டிருந்த உண்மையான நேசம் ஒவ்வொரு கணமும் தெரிந்தது. ஒருமுறை அவர்கள் அழுதபடி பிரார்த்தனை செய்வதை நான் கண்டேன். மிகுந்த வலியுடன் தனது நேசனை அதாவது இறைவனை அழைத்துக் கொண்டிருந்தார்கள். என் அன்பிற்குரிய அல்லாஹ்வே! எனது அன்பிற்குரிய அல்லாஹ்வே! என்ற வார்த்தைகள் அவர்கள் நாவில் மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருந்தன. இது நான் நேரில் கண்ட காட்சியாகும்.

அன்னார் (அலை) இறைத் தூதர் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பராக இருந்தார்கள். தமது மேலான அல்லாஹ்வின் நேசராக இருந்தார்கள். அன்னாரின் முகத்தில் அந்த இறை நேசத்தின் ஒளி இருந்தது. அன்னாரின் நாவில் அதே ஒளி வெளிப்பட்டு வந்தது. அன்னாரின் நாவில் அதே ஒளியின் ஊற்று பீறிட்டுக் கொண்டிருந்தது. ஆனால் பார்வையற்றவர்களால் பார்க்க முடியாது. (தஹ்ரீராதே முபாரகா, பக் 312 - 313)

லூதியானாவின் பிரபலமான சூஃபீ சான்றோர் ஹஸ்ரத் முன்ஷீ அஹ்மது ஜான் ஸாஹிப் அவர்கள் ஹஜ்ஜுக்கு செல்ல இருந்தார்கள். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர் ஹஜ்ஜுக்கு செல்வதற்கு முன்பு அவருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில் எழுதுகிறார்கள்:

இந்த எளியவனின் ஓர் எளிய விண்ணப்பத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தங்களுக்கு பைத்துல்லாஹ்வை தரிசிப்பதற்கு அல்லாஹ்வின் அருளால் வாய்ப்பு கிடைக்கும்போது, அந்த புகழுக்குரிய அருளுக்குரிய இடத்தில் இந்த எளிய அல்லாஹ்வின் அடியானின் சார்பாக, இதே சொற்களில், கவலையுடனும், வேதனையுடனும் கரம் கூப்பி இளகிய இதயத்துடன் இவ்வாறு வேண்டுங்கள்:

கருணையாளர்களுக்கு எல்லாம் கருணையாளனே! பணிவான, இயலாத, தவறுகள் நிறைந்த மற்றும் தகுதியற்ற, இந்திய நிலப்பரப்பில் வசிக்கின்ற உனது ஓர் அடியானான குலாம் அஹ்மதின் கோரிக்கை இதுவாகும்; அதாவது, கருணையாளர்களுக்கு எல்லாம் பெரும் கருணையாளனே! என் மீது நீ! திருப்தியடைய வேண்டும்; மேலும், என் தவறுகளையும், பாவங்களையும் மன்னித்து விடு! நீ மிக்க மன்னிப்பவனும், மீண்டும், மீண்டும் கருணை காட்டுபவனும் ஆவாய்! எந்த பணிகளில் நீ! மிகவும் திருப்தி கொள்வாயோ அதனை என்னைக் கொண்டு செய்ய வை! எனக்கும் என்னுடைய நஃப்ஸிற்கும் இடையே, கிழக்கு மற்றும் மேற்கிற்கு இடையான தூரத்தை ஏற்படுத்து. வாழ்வையும், மரணத்தையும் மற்றும் எனக்கு கிடைத்திருக்கும் ஒவ்வொரு ஆற்றலையும் உனது வழியிலேயே ஆக்குவாயாக! உனது அன்பிலேயே என்னை உயிருடன் வைப்பாயாக! உனது அன்பிலேயே என்னை மரணிக்க செய்வாயாக! உனது முழுமையான நேசர்களுடனே என்னை எழுப்புவாயாக! கருணையாளர்களுக்கு எல்லாம் பெரும் கருணையாளனே! எந்த பணிக்காக நீ! என்னை நியமித்தாயோ, எந்த தொண்டிற்காக என் இதயத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தினாயோ அதை உனது அருளால் முழுமை பெறச் செய்வாயாக! இந்த அடியானின் கைகளால் இஸ்லாத்திற்கு எதிரானவர்கள் மற்றும் இஸ்லாத்தின் அழகை பற்றி அறியாமல் இருப்பவர்களுக்கு அத்தாட்சியை முழுமை படுத்துவாயாக!

இந்த எளியவனையும், என்னைச் சார்ந்த அனைவரையும் உனது மன்னிப்பு மற்றும் கருணையின் நிழலில் அரவணைத்து மார்க்கம் மற்றும் உலகில் நீயே போதுமானவனாக இருப்பாயாக. அனைவரையும் உனது திருப்தியின் இல்லத்தில் கொண்டு சேர்ப்பாயாக. உனது தூதர் மற்றும் அவரது குடும்பத்தார் மீது மேலான ஸலவாத்துகளையும், அருள்களையும் பொழிவாயாக. (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களின் நூல், ஸீரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு பக் 541 - 542)

நான் முழுமையான அந்த துஆவின் சில பகுதிகளை தற்போது படித்துள்ளேன். அநேகமாக நடுவில் விடுபட்டு இருக்கும். எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் முன்ஷீ ஸாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைக்கு ஏற்ப, தமது குழுவினரோடு அந்த ஆண்டு ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தில் பைத்துல்லாஹ் மற்றும் அரஃபாத் மைதானம் ஆகிய இடங்களில் இந்த துஆவை செய்தார்கள். மேலும் எவ்வாறு அதன் ஒவ்வொரு சொல்லும் அன்னாருடைய இறை அன்பால் நிரம்பி இருக்கிறது; ஏக இறைவனிடம் நேசத்திற்கான வெளிப்பாடு நிகழ்கின்றது என்பதையும் நாம் காண்கிறோம்.


Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் கூறுகின்றேன்:

இறைவனிடம் நேசம் கொள்வதாலும், மேலும் அவனுக்கு கட்டுப்படுவதாலும் கடும் தண்டனை வழங்கப்படும் என்ற உறுதி எனக்கு வழங்கப்பட்டால், நான் சத்தியம் செய்து கூறுகின்றேன்: எனது இயல்பு எப்படி அமைந்திருக்கின்றது என்றால், அது அந்தத் துன்பங்களையும், சோதனைகளையும் ஓர் இன்பத்துடனும், நேச உணர்வுடனும், ஆர்வத்துடனும் தாங்கிக் கொள்ள தயாராக உள்ளது. தண்டனை மற்றும் துன்பத்தின் வடிவில் உறுதி வழங்கப்பட்டாலும், இறைவனுக்கு கீழ்ப்படிதல் மற்றும் கட்டுப்படுவதிலிருந்து ஓர் அடி வெளியேறுவதை ஆயிரக்கணக்கான இன்னும் கூறப்போனால், எல்லையற்ற மரணங்களை விட கூடுதலானதாகவும், துன்பங்கள் மற்றும் துயரங்களின் தொகுப்பாக எமது இயல்பு கருதும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 517, 2022-ம் ஆண்டு பதிப்பு)

அடுத்து, அன்னார் (அலை) கூறினார்கள்:

எல்லாவற்றின் மீதும் வல்லமை உள்ள அவனுடைய ஓர் இறைவன் இருக்கிறான் என்பதை தற்போது வரை அறியாத மனிதன் எவ்வளவு பேறிழந்தவனாக இருக்கின்றார். நமது சொர்க்கம் நமது இறைவனே! நமது பேரின்பங்கள் நம் இறைவனிடத்தே உள்ளன. ஏனெனில் நாம் அவனைக் கண்டோம். அழகனைத்தும் அவனிடத்தே கண்டோம். இந்த செல்வம் உயிரை கொடுத்தாயினும் பெறத்தக்கது. ஒருவர் தன்னை முற்றிலும் இழந்தாலும் பெறத்தக்க மாணிக்கம் ஆகும். இழப்பிற்குரியோரே! இந்த நீரூற்றின் பக்கம் விரைந்து வாருங்கள். இது உங்கள் தாகத்தை தணிக்கும். உங்களை காக்கும் உயிர் ஊற்றாகும். நான் என்ன செய்வேன்?. இந்த செய்தியை உள்ளங்களில் எவ்வாறு உறையச் செய்வேன்? இதுதான் உங்கள் இறைவன் என்று மக்கள் கேட்கும் பொருட்டு தெருக்களில் எந்த முரசை அறைந்து தெரிவிப்பேன்? மக்கள் கேட்கும் பொருட்டு அவர்கள் காதுகள் திறக்க என்ன மருத்துவம் செய்வேன்? உண்மையிலேயே நீங்கள் இறைவனுக்குரியவர்களாக ஆகிவிட்டால் அந்த இறைவன் உங்களுக்கே உரியவன் என்பதை உறுதியாக உணர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் உறங்கிக் கொண்டிருப்பீர்கள் என்றால் இறைவன் உங்களுக்காக விழித்திருப்பான். நீங்கள் எதிரியை அறியாதவர்களாக இருப்பீர்கள் என்றால், இறைவன் அவனை பார்த்துக் கொண்டிருப்பான். மேலும் அவனது திட்டங்களை முறியடிப்பான். உங்களுடைய இறைவனின் என்னென்ன வல்லமைகள் இருக்கின்றன என்பதை நீங்கள் இப்பொழுது வரை அறியாதவர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் உலகிற்காக மிகுந்த கவலை கொள்ளக்கூடிய எந்த ஒரு நாளும் உங்கள் மீது வந்துவிட வேண்டாம். தன்னிடத்தில் ஒரு கருவூலத்தை கொண்டிருக்கக் கூடிய ஒரு மனிதர் ஒரு பைசா வீணாகிப்போனால் அதற்காக அழுவாரா? கதறுவாரா மரணிப்பாரா? அப்படி இருக்கும்போது, உங்களுடைய ஒவ்வொரு தேவையின்போதும் பயன் தரக்கூடிய அந்த கருவூலத்தை பற்றிய அறிவு உங்களுக்கு இருக்கும் என்றால் எதற்காக ஏன் அவ்வாறு ஆகின்றீர்கள்?

இறைவன் ஓர் அன்பிற்குரிய கருவூலம் ஆவான். அதற்கு மதிப்பளியுங்கள். அப்பொழுது உங்களுடைய ஒவ்வொரு அடியிலும் அவன் உங்களுக்கு உதவியாளனாக இருப்பான். அவன் இல்லாமல் நீங்கள் ஒன்றுமே இல்லை. மேலும் உங்களுடைய காரணிகளும், திட்டங்களும் ஒரு பொருட்டு இல்லை. (கிஷ்தீ நூஹ், ரூஹானீ கஸாயீன், தொகுதி 19, பக் 21 - 22)

பிறகு இறைவனுடனான அன்பை வெளிப்படுத்தியவாறு மிகவும் அழகிய தொனியில் அன்னார் (அலை) கூறினார்கள்:

என் இறைவனே! என் நண்பனே! என் நேசத்திற்குரிய எஜமானனே! என் அன்பிற்குரியவனே! உலகம் கூறுகிறது. அதாவது நீ காஃபிர் ஆவாய்! என்று உலகம் என்னை கூறுகின்றது.

அன்னார் (அலை) தம்மை தாமே கூறுகின்றார்கள்.

ஆனால் உன்னைத்தவிர எனக்கு பிரியமானவன் வேறு யார் கிடைக்க முடியும்? அவ்வாறிருந்தால் அவருக்காக உன்னை நான் விட்டு விடலாம். ஆனால், நான் காண்பது என்னவென்றால், மக்கள் உலகை விட்டு கவனமற்றவர்களாக ஆகிவிடும்போதும், நான் எந்த நிலையில் இருக்கிறேன் என்று எனது நண்பர்களும், எதிரிகளும் அறியாதபோதும், அந்த நேரத்தில் நீ என்னை எழுப்புகிறாய்; மேலும், கவலை கொள்ளாதே; நான் உன்னோடு இருக்கிறேன் என்று மிகுந்த அன்போடும், நேசத்தோடும் கூறுகிறாய்; அப்படி இருக்கும்போது எனது நண்பனே இப்படிப்பட்ட பேருபகாரம் செய்த பிறகு, நான் உன்னை விட்டு விடுவது என்பது எவ்வாறு சாத்தியமாகும்? ஒருபோதும் முடியாது ஒருபோதும் முடியாது. (மவ்லானா ஷரீஃப் அமீனீ ஸாஹிப் அவர்களின் நூல், அஹ்மதிய்யா இயக்கத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸீரத், பக்கம் 23 - 24)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் அறிந்திருக்கின்ற அந்த இறை அடையாளங்களை என்னால் கணக்கிடுவது முடியாது. நீயே எனது இறைவன் ஆவாய் என்பதை நான் அறிந்து கொள்கின்றேன்.

அன்னார் (அலை) அல்லாஹ்வை நோக்கி கூறினார்கள்:

எனவே எனது ஆன்மா உனது பெயரால், (தாய்ப்) பால்குடிக்கும் குழந்தை தாயைக் கண்டவுடன் துள்ளிக் குதிப்பதை போன்று துள்ளிக் குதிக்கின்றது. ஆனால், பெரும்பாலான மக்கள் என்னை அடையாளம் காணவில்லை; ஒப்புக் கொள்ளவுமில்லை. (தர்யாகுல் குலூப், ரூஹானீ கஸாயீன், தொகுதி 15, பக்கம் 511)

எனவே தமது எஜமானரை பின்பற்றுதலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ்வுடன் உருவான இறைநேசம் மற்றும் இறைவன் மீதான அன்பு இதுவாக இருந்தது. இதற்கான அறிவுரையை அன்னார் தமது ஜமாஅத்திற்கும் வழங்கியுள்ளார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: எல்லா வகையான தியாகங்களுக்கும் தயாராக இருங்கள். நீங்கள் அல்லாஹ்விற்காக தியாகம் செய்வீர்கள் என்றால், அவன் மீதான அன்பை வெளிப்படுத்துவீர்கள் என்றால், அவனுடைய உரிமைகளை செலுத்துவீர்கள் என்றால் பிறகு அல்லாஹ்வும் உங்களிடம் எத்தகைய அன்பு கொள்வான் என்றால், ஒவ்வோர் எதிரிகளிடமிருந்தும் உங்களை பாதுகாப்பான்; எல்லா துன்பங்களிலிருந்தும் உங்களை பாதுகாப்பான்; அவனுடைய திருப்திக்காக நீங்கள் என்ன பணி செய்தாலும், இவ்வுலகிலும், மறுமையிலும் அல்லாஹ் உங்களுக்கு அதில் எண்ணற்ற அருள்களை வழங்குவான்.அல்லாஹ் நம்மை அவ்வாறான இறை நேசர்களாக, அன்பு கொள்ளக் கூடியவர்களாக ஆக்குவானாக.

நேற்றிலிருந்து புத்தாண்டு தொடங்கியுள்ளது; மக்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மக்கள் அறிவர். இந்த ஆண்டு நமக்கு எண்ணற்ற அருட்களை கொண்டு வரட்டும் என்று துஆ செய்யுங்கள். எதிரிகளின் சூழ்ச்சிகளை இறைவன் மண்ணாக்கி விடுவானாக. சுதந்திர நாடுகளில் இருப்பவர்கள் புத்தாண்டை கொண்டாடுகிறார்கள். இதுபோன்ற தருணங்களில் சிறையில் இருக்கும் நம் சகோதரர்களையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

பாகிஸ்தானின் சிறைகளில், கடந்த நாட்களில் நான் முபாரக் சானீ ஸாஹிபை குறித்து கூறியிருந்தேன். அன்னாருக்கு ஆயுள் தண்டனை வழங்கியுள்ளனர். மேலும் மற்ற சிறைவாசிகள் இருக்கின்றனர். அவர்கள் சிறைவாசத்தின் நிலையில் இருக்கின்றனர். அவர்கள் இந்நிலையில் இருந்தாலும், புதிய ஆண்டில் இறைவனுக்கு நன்றி செலுத்தியவாறு நுழைகிறார்கள். அவர்களுக்கு எந்த முறையீடும் கிடையாது. அவர்கள் இறை திருப்திக்காக இரும்பு காப்புகளை அணிந்துள்ளார்கள். அவர்கள் விடுதலை பெற இறைவன் விரைவில் வழிவகை செய்வானாக! நமக்கும், சிறைவாசிகளுக்கும், இன்னல்களில் சிக்கியிருக்கும் அந்த அனைத்து அஹ்மதிகளுக்கும் இறை நேசம் பற்றிய புரிதல் முன்னரை விட அதிகரிக்கட்டுமாக! கஷ்டங்களின் காரணமாக இறைவன் மீதான அன்பு குறையாமல் முன்பை விட அதிகரிக்கட்டுமாக! அநீதிக்குள்ளானவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் உலகின் அநீதிக்குள்ளான அனைவரையும் அநியாயக்காரர்களின் பிடியிலிருந்து விடுவிப்பானாக! உலகில் அமைதி நிலவட்டுமாக!

தொழுகைக்குப் பிறகு ஜனாஸா காயிப் தொழுகையையும் நான் தொழ வைப்பேன். மூன்று காயிப் ஜனாஸாக்கள் உள்ளன. முதல் ஜனாஸா ரீஹானா பாஸ்மஃ அவர்களுடையதாகும். அன்னார் ஸய்யிது ஸய்யது அஹ்மது ஸாஹிப் நாஸிர் அவர்களின் மனைவி ஆவார்கள். அன்னார் கடந்த சில நாட்களுக்கு முன்பு 90 வயதில்




மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

அவர்கள் இறையருளால் வஸிய்யத் செய்திருந்த பெண்மணியாக இருந்தார்கள்.

அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகன்வழிக் கொள்ளுப் பேத்தி ஆவார்கள். ஹஸ்ரத் மிர்ஸா ஸுல்தான் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களின் மகன்வழிப் பேத்தியும், ஹஸ்ரத் மிர்ஸா அஸீஹ் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களின் மகளும், ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகள்வழிப் பேத்தியுமாக இருந்தார்கள். திருமணத்திற்கு பிறகு அன்னார் தமது கணவருடன் கிழக்கு ஆஃப்ரிக்காவிற்கு சென்றார்கள். கென்யாவில் தங்கி வந்தார்கள். அங்கும் அன்னார் லஜ்னா அமைப்பின் பணிகளை செய்தார்கள். கிளை அமைப்புகளின் வட்டத்தில் அன்னார் தொண்டாற்றி வந்தார்கள். அவர்களுக்கு மூன்று மகன்கள் உள்ளனர். ஒரு மகன் அனீஸ் அஹ்மது ஆவார். அன்னாரின் இரண்டு மகன்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்கள் ஆவர். ஸய்யிது தாஹிர் அஹ்மது அவர்கள் ரப்வா அஞ்சுமன் அஹ்மதிய்யாவில் அடிஷனல் நாஸிர் இஷாஅத் ஆக இருக்கின்றார்கள். ஸய்யிது முத்தஸிர் அஹ்மது இவர்களும் வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவார். இவர் நஸாமத் ஜாயிதாத் துறையில் பணியாற்றி வருகின்றார். இதேபோன்று அன்னாரின் மகள் ஸுல்தானா டாக்டர் ஸுல்தான் அஹ்மது அவர்களின் மனைவி ஆவார்கள். இதேபோன்று ஃபர்ஹானா அவர்கள் மிர்ஸா கலீம் அஹ்மது ஸாஹிப் அவர்களின் மருமகள் ஆவார்கள். மேலும் ஸாஹிப் ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மது ஸாஹிப் அவர்களின் மருமகள் ஆவார்கள்.

அன்னாரது மகன் ஸய்யிது தாஹிர் அஹ்மது கூறுகின்றார்: (எனது தாயாருக்கு) திருக்குர்ஆன் மீது மிகுந்த அன்பும், ஈடுபாடும் இருந்தது. மேலும் திருக்குர்ஆனை தவறாமலும், அதிகமாகவும் ஓதிவந்தார்கள். கிலாஃபத்துடன் எல்லையற்ற அன்பும், பற்றும் இருந்தது. இதே விஷயங்களை அவர்களின் அனைத்து பிள்ளைகளும் எழுதியுள்ளனர். இதே விஷயங்களை அவர்கள் தமது பிள்ளைகளிடத்திலும் உருவாக்கியுள்ளார்கள்.

அன்னாரது மகன் அனீஸ் அஹ்மது எழுதுகின்றார்:

ஒவ்வொருவரின் மகிழ்ச்சியிலும், துன்பத்திலும் எப்போதும் பங்கெடுப்பார்கள். மேலும் குறிப்பாக சந்தா கொடுப்பது தொடர்பாக அறிவுறுத்தி வந்தார்கள். மேலும், சந்தா செலுத்தி விட்டீர்களா? இல்லையா என்று விசாரித்து வந்தார்கள். இதேபோன்று நஃபில் நோன்புகளின் பக்கமும் கவனமூட்டி வந்தார்கள்.

அன்னாரின் மகள் ஃபர்ஹானா ஃபவ்ஸியா கூறுகின்றார்கள்:

என் தாயார் தஹஜ்ஜுத் தொழுகையை பேணி வந்ததை நான் சிறுவயது முதலே பார்த்திருக்கின்றேன். தாமும் தொழுகைகளைப் பேணுவார்கள்; பிள்ளைகளுக்கும் குறித்த நேரத்தில் தொழும்படி அறிவுரை செய்து வந்தார்கள். கூறுகின்றார்: திருக்குர்ஆனை ஓதி வந்த காரணத்தினால் எனது தாயாருக்கு பல நீண்ட சூராக்கள் மனனமாக இருந்தது. மேலும், திருக்குர்ஆனை உரத்த குரலில் ஓதுமாறு எங்களுக்கு அறிவுறுத்துவார்கள். கூறுகின்றார்கள்: அன்னார் திருக்குர்ஆனை திரும்பத் திரும்ப ஓதிய காரணத்தினால், அதனை ஆழமாக ஓதி வந்த காரணத்தினால், அன்னாரிடம் இந்த சிறப்பம்சம் உருவாகியிருந்தது. அதாவது, நாங்கள் தூரத்தில் அமர்ந்து திருக்குர்ஆன் ஓதுவதில் ஏதேனும் தவறிழைத்து விட்டால், அன்னார் திலாவத்தை செவியுற்றுக் கொண்டிருந்தார்கள் என்றால் அதை தவறை சுட்டிக் காட்டி விடுவார்கள். இதேபோன்று, அன்னாரிடம் விருந்தோம்பல் செய்யும் பண்பு அதிகம் இருந்தது. தற்போதோ ஏராளமான வசதிவாய்ப்புகள் இருக்கின்றன. சிலமுறை வசதிவாய்ப்புகள் குறைவாக இருந்தன. குளிர்காலத்தில் கீஸர் மூலமாக, பாயிலர் மூலமாக சுடு தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே விருந்தினர்கள் உளு செய்வதற்கு அதிகாலையிலேயே எழுந்து தண்ணீரை சூடுபடுத்தி வைப்பார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபா (ரஹி) அவர்களுடன் அன்னாரது கணவர் அதாவது ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகனான டாக்டர் ஸய்யிது ஸய்யது அஹ்மது ஸாஹிபுடன் நட்பு இருந்தது. அவர்களுடைய வீட்டிற்கு எப்பொழுதாவது பயணத்தில் சென்றால், அங்கு தங்கி வந்தார்கள். ஆக, ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் சுயமே இதனை குறிப்பிட்டுள்ளார்கள். அதிகாலையிலேயே எழுந்து நான் உளூ செய்வதற்காக தண்ணீரை சூடாக்கி குளியலறையில் வைத்து வந்தார்கள்; ஒருநாள் நான் சுயமே விரைவாகவே எழுவேன்; மேலும் சுயமே தண்ணீரை சூடுபடுத்திக் கொள்வேன்; அவர்களுக்கு எந்த சிரமும் இருக்கக் கூடாது என்று நான் எண்ணம் கொண்டேன். ஆனால் கூறுகின்றார்கள்: நான் என் தரப்பில் விரைவாக எழுந்திருந்தேன். ஆனால், அதற்கு முன்பாகவே அங்கு வெந்நீர் வைக்கப்பட்டிருந்ததை நான் கண்டேன்.

அன்னாருக்கு வாழ்க்கையில் பல பொருளாதார சிரமங்களை எதிர் கொள்ள நேரிட்டது. ஆனால், மிகவும் முறையாக அன்னார் தமது குடும்பத்தை நிர்வகித்தார்கள்.

நான் கூறியது போன்று ஆரம்பத்தில் கென்யாவில் இருந்தார்கள். பின்னர் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறியதற்கிணங்க, இந்த மக்கள் பாகிஸ்தானுக்கு திரும்பி வந்து விட்டனர். மேலும் இங்கு வந்த பிறகு நிலைமை முன்பு போல் இல்லை. ஆனால் அவர்கள் அனைத்தையும் மிகுந்த மகிழ்ச்சியுடனும், பொறுமையுடனும் சகித்துக் கெண்டார்கள்.

அன்னாருடைய சகோதரி அதியக்கா ஃபர்ஸானா கூறுகிறார்: ஜமாஅத்திற்கான தன்மானம் அதிகமாக இருந்தது. ஜமாஅத்திற்கு எதிராக எதையும் கேட்பதை அவர்கள் விரும்பியதில்லை.

இதேபோல் அன்னாருடைய மற்றுமொரு சகோதரி துர்ரேஷஹ்வார் இருக்கின்றார். கூறுகின்றார்: தஹஜ்ஜுத் நேரத்தில் எழுவதற்கு அன்னாருக்கு எத்தகைய பழக்கம் இருந்தது என்றால், அன்னார் அலாரமே இல்லாமலே தஹஜ்ஜுத் தொழுகைக்கு எழுந்து வந்தார்கள். எனக்கு ஐந்து மகள்கள் இருக்கின்றனர்; மேலும், நான் மகள்களின் காரணமாக கவலைப்பட்டு வந்தேன். அப்போது, கவலைப்படாதீர்கள் என்று கூறிவந்தார்கள். அல்லாஹ் அவர்களின் திருமண வரன்களை சிறப்பாக செய்து வைப்பான் என்று கூறிவந்தார்கள். பின்னர் அல்லாஹ் உண்மையிலே அவர்களுக்கு நல்ல வரன்களை ஏற்படுத்தி கொடுத்தும் விட்டான்.

கூறுகின்றார்கள்: அவர் மிகவும் பொறுமைசாலியாகவும், நன்றியுள்ளவராகவும், மிகவும் தைரியமிக்கவராகவும் இருந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும், கருணையுடனும் நடந்து கொள்வானாக.

அடுத்த நற்குறிப்பு, லைபீரியாவின் முன்னாள் நேஷனல் ஸத்ர் லஜ்னாவாக இருந்த இஃப்ஃபத் ஹலீம் ஸாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் மன்றோ லைபீரியாவின் கிளினிக் இன்சார்ஜ் வாழ்வை அர்ப்பணித்தவர் டாக்டர் அப்துல் ஹலீம் ஸாஹிப் அவர்களுடைய மனைவி ஆவார்கள். இவர்கள் நோய்வாய்ப்பட்டார்கள். கடந்த நாட்களிலோ சிகிச்சைக்காக ஹாலந்து சென்று விட்டார்கள். டிசம்பர் 21 அன்று தமது 59 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

அல்லாஹ்வின் அருளால் அவர்கள் தமது சொத்தில் மூன்றில் ஒரு பங்கை வஸிய்யத் செய்திருந்தார்கள். அவர்களின் குடும்பத்தில், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் கரத்தில் பைஅத் செய்திருந்த அன்னாரது கொள்ளுத் தாத்தா மதிப்பிற்குரிய முஹம்மது அலீ கான் ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. ஜுலை, 2004-ல் தமது கணவருடன் லைபீரியா சென்றார்கள். அவர்கள் 21 ஆண்டுகாலத்தை லைபீரியாவில் கழித்தார்கள். இதற்கிடையில், அன்னார் லஜ்னா அமைப்பின் சத்ர் ஆகவும் பணியாற்றினார்கள். இரண்டு, மூன்று சந்தர்ப்பங்களில் அன்னாருக்கு சேவை செய்யும் வாய்ப்பு கிடைத்தது. மரணத்தின்போதும் அன்னார் சத்ர் லஜ்னாவாக தொண்டாற்றும் நற்பேறு பெற்றுக் கொண்டிருந்தார்கள். தஹஜ்ஜுத் தொழக் கூடியவராக இருந்தார்கள். நோன்பு நோற்பவராகவும், தொடர்ந்து திருக்குர்ஆன் ஓதுபவராகவும், கிலாஃபத்தின் மீது அளவற்ற தொடர்பு மற்றும் பற்றை வெளிப்படுத்தக் கூடிய பெண்மணியாகவும் இருந்தார்கள். மேலும், கிளை அமைப்புகளில் தமது பொறுப்புகளை மிகுந்த நேர்மையுடன் நிறைவேற்றி வந்தார்கள். பொருள் தியாகங்களில் போட்டிபோட்டுக் கொண்டு பங்கேற்பார்கள். தாராளமாக தருமம் செய்து வந்தார்கள் விருந்தோம்பல், சகஜமாக பழகுதல், இனிய குணம் மற்றும் துயரத்திற்குள்ளான மனிதகுலத்திற்கு தொண்டாற்றும் உணர்வு ஆகியவை அன்னாரிடம் நிறைந்திருந்தது. அவர்கள் மிகவும் நல்ல பெண்மணியாக இருந்தார்கள். திருக்குர்ஆனை தாமாகவே ஆர்வத்துடன் ஓதிவந்தது மட்டுமின்றி, லஜ்னா அமைப்பிற்காக

சில சிறப்பு வகுப்புகளும் ஏற்பாடு செய்து வந்தார்கள். மேலும், குழந்தைகளுக்கு கற்பித்து வந்தார்கள். பிறகு அவர்களுக்கு ஆமீன் நிகழ்ச்சிகளையும் நடத்தி வைப்பார்கள். விருந்தோம்பல் பண்பு அவர்களுடைய மிகவும் உயரிய பண்பாக இருந்தது. மேலும் சில நாட்களுக்கு மட்டும் அவர்கள் விருந்து உபசரிப்பு செய்யவில்லை.மாறாக பல பல நாட்கள் அவர்கள் வீட்டில் வந்து விருந்தினர்கள் தங்கி வந்தனர். மேலும் மனமகிழ்ச்சியுடன் விருந்து உபசரிப்பு செய்து வந்தார்கள். இன்னும் கூறப்போனால், ரமலான் மாதத்தில் தேவையுடைய மக்களுக்கு தொடர்ந்து எப்போதும் ஸஹ்ரீ மற்றும் இஃப்தாரீ உணவிற்கான ஏற்பாட்டை செய்து வந்தார்கள். அன்னாரை அறிந்திருந்த ஒவ்வொரு நபரும் அன்னாருடைய இந்தப் பண்பை மிகவும் நேசத்துடன் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆரிஃபா என்ற ஒரு ஹல்க்காவின் சதர் லஜ்னா ஸாஹிபா இருக்கின்றார்கள். கூறுகின்றார்கள்:

தொழுகைகளை பேணுதலில் அவர்களின் நிலை இவ்வாறு இருந்தது. அதாவது பணி செய்து கொண்டிருக்கும்போது, தொழுகைக்கான நேரம் வந்துவிட்டால், முதலில் தொழுவோம்; பிறகு நாம் மற்ற வேலைகளை தொடர்வோம் என்று கூறுவார்கள். நான் பார்த்திருக்கிறேன். முதலில் வேலையை முடியுங்கள்; பிறகு தொழுது கொள்ளுங்கள் என்பது போன்ற விஷயமெல்லாம் இருக்காது. இதனை அவர்களின் வீட்டிற்கு செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் நான் பார்த்திருக்கின்றேன்.

அதேபோல் அங்குள்ள முபல்லிஃக் ஃபரக் ஷஃபீர் ஸாஹிப் கூறுகின்றார்:

இஃப்ஃபத் ஹலீம் ஸாஹிபாவின் தனித்தன்மையை சில வார்த்தைகளில் எடுத்துரைக்க வேண்டுமானால், அவர் லைபீரியாவில் அஹ்மதிய்யத்தின் உண்மை முகமாக திகழ்ந்தார் என்று சொல்லலாம்.

இதேபோன்று அங்கிருக்கும் உள்ளூர் லைபீரியன் முபல்லிஃக் மதிப்பிற்குரிய மோமோ மோமோ ஸாஹிப் இருக்கின்றார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

எனக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களை சந்திப்பதற்கும், உரையாடுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. தனது பிள்ளைகளின் மீது எல்லையற்ற அன்பு கொண்ட ஒரு தாயுடன் பேசுவது போன்ற உணர்வையே ஒவ்வொரு முறையும் நான் பெற்றேன்.

அவர்களுக்கு சொந்த பிள்ளைகள் இல்லை. பின்விட்டுச் சென்றவர்களில் கணவர் மட்டுமே உள்ளார். இது தவிர அவர்கள் இரண்டு குழந்தைகளை தத்தெடுத்தார்கள். ஒருவர் கணவருடைய சகோதரரின் மகள் ஆவார். அவரை வளர்த்து பராமரித்தார்கள். அவர் படித்து வருகிறார். அவருக்கு 14 வயதாகும். ஆனால் மற்றொரு லைபீரிய சிறுவர் அஹ்மத் மஸ்ரூர் சிங் பா ஆவார். அவரையும் சிறுவயதிலேயே தத்தெடுத்து தங்கள் சொந்த பிள்ளையைப் போன்று வளர்த்தார்கள்; கல்வி புகட்டினார்கள். தற்போது அவர் ஜாமிஆ அஹ்மதிய்யா இன்டர்நேஷனல் காதியானில் ஐந்தாம் ஆண்டு மாணவராக உள்ளார். அல்லாஹ் இந்த குழந்தைகளுக்கான அன்னாரின் துஆக்களை ஏற்றுக் கொள்வானாக! அவர்களுக்கு மன்னிப்பையும், கருணையையும் வழங்குவானாக!

மூன்றாவது குறிப்பு எகிப்துடைய ஜமாஅத் தலைவர் மதிப்பிற்குரிய அப்துர் அலீம் அல்பர் பரீ அவர்களுடையதாகும். இவர்களும் கடந்த சில நாட்களுக்கு முன்பு 64வது வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் ஒரு சிறந்த அர்ப்பணிப்புள்ள மற்றும் விசுவாசம் மிக்க அஹ்மதியாக இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு மனைவியும் ஒரு மகளும் உள்ளனர். அவரது மனைவி அல்லாஹ்வின் அருளால் அஹ்மதி ஆவார். அவர்கள் எழுதுகின்றார்கள்: எனது கணவருக்கு அல்லாஹ்வின் மீது எந்த அளவிற்கு அன்பு இருந்தது என்றால், அவர்கள் இறைவனை நினைவுகூர்வதற்காகவே பிறந்துள்ளார்கள் என்பது போல் இருந்தது. அவர்கள் மிகவும் நற்பண்புகள் கொண்ட மனிதராக இருந்தார்கள். எவரிடமும் ஒருபோதும் கடுமையாக பேசியதில்லை. கூறுகின்றார்கள்: அவர்களுடனான 31 ஆண்டு கால திருமண வாழ்க்கையில் அவர்கள் ஒருபோதும் எனக்கு எந்த துன்பத்தையும் கொடுத்ததில்லை. மாறாக, அவர்கள் ஒரு சிறந்த மற்றும் நேர்மையான கணவராக இருந்தார்கள்.

அவர்களது மகள் 2008 இல் எம்.டி.ஏவை பார்த்து பைஅத் செய்தார். மகள் மட்டுமல்ல அப்துல் அலீம் ஸாஹிப் அவர்களும், அவர்களது மகனும் 2008 இல் எம்.டி.ஏ அல் அரேபியவைப் பார்த்து பைஅத் செய்தனர்.

அன்னாருடைய இந்த மனைவி எழுதுகின்றார்: நான் ஆரம்பத்தில் கடுமையாக எதிர்த்தேன். அவர்களுக்கு பல சிக்கல்களை உருவாக்கினேன். உறவினர்களை திரட்டி அவர்களை எதிர்க்கச் செய்தேன். ஆனால் தந்தை மற்றும் மகள் இருவரும் பொறுமையை கடைப்பிடித்தனர். மனைவி கூறுகிறார்: ஒருநாள் என்னுடைய கணவர் தொழுதவாறு, உரத்த குரலில் துஆ செய்து கொண்டிருந்தார்கள். எனது இறைவா, ஒன்று என் மனைவிக்கு நேர்வழி வழங்கி விடு; அல்லது அவரை என்னிடம் இருந்து வெகு தூரம் அழைத்துச் சென்று விடு என்று அவர்கள் மீண்டும், மீண்டும் என்னைக் குறித்து கூறிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன்.

இந்த துஆவால் நான் மிகவும் தாக்கத்திற்குள்ளானேன். ஆனால் நான் அதை அவர்களிடம் கூறவில்லை. மேலும் தொடர்ந்து துஆ செய்து வந்தேன். இறுதியாக, ஒரு மாதத்திற்குப் பிறகு இறைவனின் அருளால், என் இதயம் தெளிவாகி விட்டது. எனக்கும் பைஅத் செய்யும் நற்பேறு கிடைத்தது.

எங்களுக்கு வழிகாட்டல் கிடைக்கவில்லை என்று மக்கள் கூறுகின்றனர் அல்லவா? ஆக, எந்த மக்கள் நல்ல எண்ணத்துடன் வழிகாட்டலை வேண்டுகின்றார்களோ அல்லாஹ் அவர்களுக்கு நிச்சயமாக வழிகாட்டவும் செய்கின்றான்.

பைஅத்திற்குப் பிறகு அவருடைய சகோதரர்கள் கடுமையாக எதிர்த்தனர். ஆனால் அவர் தமது ஈமானில் உறுதியாக இருந்தார்; அவரை அஹ்மதிய்யா கொள்கையிலிருந்து விலக்குவதற்காக அவருடைய சகோதரர்கள் ஒரு பிரபலமான மௌலவியை அழைத்து வந்தனர். ஆனால், அந்த மௌலவி தோல்வியடைந்தார்.

ஏனெனில், அன்னாருடைய மனைவி எழுதுகின்றார்:

எனது கணவர் அவருக்கு தமது தொனியில் ஒரே பதிலையே வழங்கினார்; அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் எனக்கு எந்த அளவிற்கு மிகத் தெளிவாக தெரிந்து விட்டது என்றால், மேலும் எந்த அளவிற்கு அது என் இதயத்தில் ஆழமாக பதிந்துவிட்டது என்றால், என்னால் இனி என் நம்பிக்கையில் இருந்து மாற முடியாது. ஏனெனில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக எனக்கு அல்லாஹ்வைப் பற்றிய ஞானம் கிடைத்துள்ளது; அதை ஒருபோதும் என்னால் துறக்க முடியாது; அல்லாஹ்வின் மீதான இந்த அன்பின் வெளிப்பாட்டைப் பாருங்கள்! எவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மக்களின் உள்ளங்களிலும் உருவாக்கியுள்ளார்கள் என்று பாருங்கள்;

இறை வணக்கத்திற்காக மிக அதிகமாக கடும் முயற்சி செய்வார்கள். கூறுகின்றார்: பதினோரு ஆண்டுகள் நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும் அவர்கள் எப்பொழுதும் பொறுமையுடனும் திருப்தியுடனும் இருந்தார்கள். யார் அல்லாஹ்வை சந்திக்க விரும்புகிறாரோ அல்லாஹ்வும் அவரை சந்திக்க விரும்புகிறான் என்று அவர்கள் அடிக்கடி கூறி வந்தார்கள். மரணத்தின் கடைசி நாட்களிலும் அவர்களின் நாவில் இருந்து, அல்லாஹ் அல்லாஹ் என்ற வார்த்தைகளே வந்தன.

எகிப்து ஜமாஅத்தின் ஸத்ர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: நான் அன்னாரிடம் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் இயல்பான நேசத்திற்கான வெளிப்பாட்டை எப்போதும் கண்டேன். சிலர் அன்னாரை குழப்பத்தில் ஆழ்த்த முயன்றனர். ஆனால், அன்னார் தமது பைஅத்தில் உறுதியாகவும், உண்மையுடனும் இருந்தார்கள். கிராமத்தின் நூற்றுக்கணக்கான அஹ்மதி அல்லாதவர்கள் அஹ்மதிகளுடன் சேர்ந்து அன்னாரின் ஜனாஸா தொழுகையை நிறைவேற்றினார்கள். அவருடைய மகன் அஹ்மதி இல்லை. ஆனால், தமது ஜனாஸா தொழுகையை அஹ்மதிதான் தொழ வைப்பார் என்று அவருக்கு அன்னார் அறிவுரை வழங்கியிருந்தார்கள். அதன்படி ஸத்ர் ஸாஹிப் அவர்கள்தான் அஹ்மதி அல்லாதவர்களுடைய பள்ளிவாயிலுக்குச் சென்று ஜனாஸா தொழுகையை நடத்தினார்கள்.

அஹ்மதி அல்லாதவர்களும் அதில் கலந்து கொண்டார்கள். நான் ஏற்கனவே கூறியது போல் அவருடைய மகன் அஹ்மதி அல்லாதவர்களும் அதில் கலந்து கொண்டனர். நான் கூறியது போன்று அன்னாரது மகன் அஹ்மதியில்லை. ஆனால் அவர் நற்பண்புகளை கொண்டவர். மேலும் ஜமாஅத்தை பற்றி ஆராய்ச்சியும் செய்து வருகிறார். அல்லாஹ் அவருக்கு பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

தாஹிர் நதீம் அவர்களும் அன்னாரைக் குறித்து

எழுதியுள்ளார்கள். கூறுகின்றார்கள்:

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் எகிப்து சென்றிருந்தேன். அங்கு அன்னாரை சந்தித்தேன். தாஹிர் நதீம் ஸாஹிப் கூறுகின்றார்கள்: அங்கு அன்னார் தமது மனைவியின் பைஅத் தொடர்பான ஒரு சம்பவத்தை எனக்கு கூறினார்கள்.

கூறுகின்றார்கள்: தொடக்கம் முதலே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது உறுதியான ஈமான் இருந்தது. ஆனால் அல்லாஹ் எனது துஆவை ஒப்புக்கொண்டு எனது மனைவியின் பைஅத்தின் மூலம் எனது நம்பிக்கையை மேலும் உறுதியாக்கி விட்டான். ஏனென்றால் ஒரு காலத்தில் எனக்கு கடுமையான எதிரியாக ஆகியிருந்த என் மனைவி தற்போது என்னுடன் ஒவ்வொரு ஜமாஅத் கூட்டத்திற்கும் வருகிறார் என்பதை என்னால் கற்பனை கூட செய்ய முடியவில்லை. அவர் இப்பொழுது மிகுந்த மன மகிழ்ச்சியுடன் ஜமாஅத் பணிகளை செய்கிறார் சுத்தம் செய்தல், உணவு சமைத்தல் போன்ற லஜ்னாவின் பணிகளை செய்கின்றார்.

அல்லாஹ் அன்னாருடைய பிள்ளைகளையும், மகளையும், மனைவியையும் தூய்மை மற்றும் நன்றியுணர்வில் மேன்மேலும் அதிகரிப்பானாக. அன்னாருடைய மகனுக்கும் ஜமாஅத்தை ஏற்றுக் கொள்வதற்கான நற்பேறை வழங்குவானாக. அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஜனவரி 23, 2026. பக் 1 - 8) தமிழாக்கம்

முபல்லிஃக்

A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

******* *

16- ம் பக்கத் தொடர்ச்சி.......
(குத்பா பேருரை 9.1.26)

அதிகரித்துவிட்டது. மேலும் என்னுடைய நம்பிக்கை உறுதியானது. இறைவன் எவ்வாறு ஜமாஅத்திற்காக தியாகம் செய்ததன் காரணத்திற்காக எனக்கு வழங்கினான் என்று எனது ஈமான் உறுதியானது. இவ்விஷயத்தினால் ஜமாஅத் நிச்சயமாக உண்மையில் உள்ளது என்று நான் புரிகின்றேன் என்று கூறினார்.

இறைவன் ஈமானை உறுதியாக்குகின்றான். இறைவழியில் நாம் செய்கின்ற தியாகங்கள், அல்லாஹ்வுடைய பார்வையில் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஒரு லட்சம் கொடுத்தேன். இறைவன் எனக்கு பன்மடங்கு அதிகரித்து கொடுத்து விட்டான்.

கஜகிஸ்தான் உடைய நகரம் அக்தாவில், அலி பேக் என்ற ஒரு தூய்மையான நண்பருடைய சம்பவம். சந்தா கொடுப்பதில் முறையாக இருப்பவர் ஆவார். ஒவ்வொரு குறித்த நேரத்தில் சந்தா செலுத்தி விடுவார். சில நாட்களாக நிர்பந்தத்தின் காரணமாக சந்தா கொடுக்க முடியவில்லை. எதுவரை என்றால், கட்டாயச் சந்தா மற்றும் வக்ஃபே ஜதீத் வருடம் முடிவிலும் சந்தா செலுத்த முடியவில்லை. மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். ஒரு நாள் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவரே கூறினார்: அதிக கடனாகிவிட்டது. இதன் காரணமாக பேங்க், கணக்கை மூடி விட்டது ; இதனால் சந்தாவும் செலுத்த முடியவில்லை. இறைவன் அருள் புரிய வேண்டும் என்று துஆ செய்கின்றேன்.

அவர் கூறுகிறார்: ஒரு நாள் எந்த கம்பெனியில் நான் பணிபுரிகின்றேனோ அந்த கம்பெனியுடைய அதிகாரி நாங்கள் ஒரு வருடமாக காத்துக் கொண்டிருந்த நல்ல தொகையை போனஸாக கொடுத்தார். இது கிடைப்பதற்கு ஏதுவான எந்த சூழலும் இல்லாமல் இருந்தது. எவ்வாறு இருப்பினும் தொகை கிடைத்தது. அல்லாஹ்வுடைய அருளினால் என்னுடைய கடன் அகன்றது. மேலும் சந்தாவையும் செலுத்தி விட்டேன்.

அலி பேக் ஸாஹிப் கூறுகின்றார்: இந்த அருள் என்னுடைய சந்தா செலுத்தியதற்காக இருந்தது என்று என்னால் உறுதியாக நம்ப முடிகின்றது.

அல்லாஹ் தன் மீது கடன் வைத்துக் கொள்ளாத மற்றும் அசாதாரணமான ரீதியில் அருளுகின்ற ஒரு சம்பவத்தை ஆஸ்திரேலியாவுடைய அமீர் ஸாஹிப் எழுதியுள்ளார்கள்.

தற்போது இவை ஒன்று போல் இருக்கக் கூடிய பல நாடுகளுடைய சம்பவங்கள் ஆகும்.

அமீர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: கோல்ட் கோஸ்ட்டைச் சேர்ந்த ஒரு நண்பர் இருக்கின்றார். அவர் தனது வக்ஃபே ஜதீத் சந்தாவாக ஆயிரம் டாலர் எழுதியிருந்தார். அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்: இந்தத் திட்டத்தில் மேற்கொண்டு பொருள் தியாகம் செய்யுங்கள் என்று நான் அவருக்கு கவனமூட்டினேன். பொதுவாக அவர் அதிக செல்வம் படைத்தவர் ஒன்றும் கிடையாது. நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த சற்று வசதிபடைத்த மக்கள் இருக்கின்றனர். அவர்களும் கூட இவ்வளவு தியாகங்கள் செய்வதில்லை. ஆனால், சிலர் எப்படிபட்டவர்களாக இருக்கின்றனர் என்றால், நான் கூறியது போன்று அவர்கள் (மிகவும்) தியாகம் செய்கின்றனர்.

அமீர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: ஒரு வகையில் ஏழைகளுடன் ஒப்பிடும்போது பொறுத்தவரை அவர்களுடைய தரம் அவ்வளவு சிறப்பாக இருப்பதில்லை. ஆனால் அவ்வாறு இருந்தும் நல்ல தியாகங்கள் செய்து விடுகின்றார்கள்.

எவ்வாறு இருப்பினும், ஜமாஅத்திற்காக தியாகங்கள் செய்யக்கூடிய நல்ல வாழ்வாதாரத்தை கொண்டவர்களுடைய சம்பவங்களையும் நான் எடுத்துக் கூறுகின்றேன். இந்த நண்பர் ஆயிரம் டாலர் வாக்குறுதி அளித்திருந்தார். அதை செலுத்தி விட்டார். இவரிடம் மேற்கொண்டு தியாகம் செய்யுங்கள் என்று கவனமூட்டப்பட்ட போது, இவர் மேற்கொண்டு ஆறாயிரம் டாலர் முன் வைத்தார். ஆறு மடங்கு அதிகரித்து, இவ்வாறு மொத்தமாக ஏழாயிரம் டாலர் செலுத்தி விட்டார். அடுத்த நாள், இவருக்கு ஒரு ஃபோன் அழைப்பு வந்தது. அவர்கள் கூறுகின்றார்கள்: என்னுடைய மனைவிக்கு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியிடமிருந்து ஒரு ஃபோன் வந்தது. அவர்கள் கூறுகின்றார்கள்: நிலுவையில் இருந்த, நாங்கள் கேட்டிருந்த இன்ஷ்யூரன்ஸ் பற்றிய வேலை நடந்து கொண்டிருந்தது. இதனைப் பற்றி நாங்கள் முன்பு அறிந்திருக்கவில்லை. இதன் விளைவாக எங்களுக்கு 12 ஆயிரம் டாலர் தொகை ரீஃபண்ட் வடிவில் கிடைத்தது.

அந்த நண்பர் கூறுகின்றார்: நான் இறைவனுக்கு ஆறாயிரம் தியாகம் செய்தேன். அவன் இரண்டு நாட்களில் இரண்டு மடங்காக அதிகரித்து, தொகையை திருப்பி தந்து விட்டான். எதிர்பாராத மற்றும் நம்பிக்கை இல்லாத இடத்திலிருந்து திருப்பி தந்துவிட்டான்.

கீனிபஸாவுடைய முபல்லிஃக் எதிர்பாராத விதமாக அல்லாஹ்வுடைய அருள் பொழிந்த நிகழ்வைப் பற்றி எழுதுகின்றார்கள்:

ஒரு தூய்மையான அஹ்மதி அபு ஸானியா ஸாஹிப் நாட்டை விட்டு வெளியே இருந்தார். நாட்கள் கடந்த பிறகும் கூட அவருக்கு ஏற்ற வேலை கிடைக்கவில்லை. இதனால் பொருளாதார அழுத்தத்தில் இருந்தார். மனிதன் வெளிநாட்டில் இருக்கும் பொழுது, வேலையும் இல்லாமல், பணமும் இல்லாமல் இருக்கும்போது அவனுடைய நிலை எப்படி இருக்கும்? அப்பொழுது அவர் கையில் ஏதாவது செல்வம் கிடைத்தால் அது அவருக்கு மிகவும் விருப்பத்திற்குரியதாக இருக்கும். அதை தனக்கு செலவு செய்வார்.

ஆனால் இந்த தூய்மையானவரின் நிலையை பாருங்கள்! அந்நேரத்தில் ஜமாஅத்திடம் இருந்து சந்தா கேட்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு லெப்பைக் கூறியவாறு அபு ஸானி அல்லாஹ்வின் வழியில், தன்னிடம் இருந்ததை தியாகம் செய்துவிட்டார். அப்பொழுது அவரிடம் சிறப்பான தொகை எதுவும் இருக்கவில்லை. என்ன இருந்ததோ அது அவருக்கு விருப்பமானதாக இருந்தது. ஆனால் அவர் அதை அல்லாஹ்வின் வழியில் கொடுத்து விட்டார். எவ்வாறு இருப்பினும் அல்லாஹ் அவருடைய தியாகத்தை உடனடியாக ஏற்றுக்கொண்டான். சந்தா செலுத்தி ஒரு வாரம் கூட கழிந்திருக்கவில்லை, அவர் விண்ணப்பம் கொடுத்திருந்த ஒரு கம்பெனியில் இருந்து அவருக்கு ஃபோன் கால் வந்தது.

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...)**

தமிழாக்கம்

முபல்லிஃக்

ஸாஹிர் ஹுஸைன்

******* *

# ஜுமுஆ பேருரை

**வக்ஃபே ஜதீதின் 68-ம் ஆண்டின்போது ஜமாஅத் உறுப்பினர்கள் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட பொருள் தியாகங்களைப் பற்றிய நற்குறிப்புளும் 69-வது ஆண்டின் துவக்கத்திற்கான அறிவிப்பும்**

பல்வேறு நாடுகளைச் சார்ந்த தூய அஹ்மதிகளின் பொருள் தியாகங்களுக்கான ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்

அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீதின் 68-ம் ஆண்டில் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத் சுமார் 15 மில்லியன் பவுண்ட் பொருள் தியாகத்தை சமர்ப்பிப்பதற்கான நற்பேறு கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 1.3 மில்லியன் பவுண்ட் கூடுதலாகும்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 09 ஜனவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **09 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۞ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ ۵ وَمَا تُنْفِقُوْا مِنْ شَيْءٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيْمٌ

இந்த வசனத்தின் பொருள்: நீங்கள் உங்களுக்கு விருப்பமான செல்வத்திலிருந்து (இறைவனுக்காகச்) செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையினைப் பெறமுடியாது. நீங்கள் எப்பொருளைச் செலவு செய்கின்றீர்களோ அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான்.(ஆலி இம்ரான்:93)

இதனுடைய விளக்கவுரையில் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

திருக்குர்ஆனில் சூரா அல் பக்கராவுடைய முதல் ருகூவுவில் இறையச்சமுடையவர்கள் தொடர்பாக وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ என்று கூறியுள்ளான். அதாவது, அல்லாஹ் வழங்கியவற்றிலிருந்து அவர்கள் செலவு செய்கின்றார்கள். இது முதல் ருகூவுடைய விஷயமாகும். இந்த சூராவில் பல இடங்களில் இறை வழியில் செலவு செய்ய வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆக, நீங்கள் உங்களுக்கு விருப்பமான செல்வத்திலிருந்து செலவு செய்யாத வரை உங்களால் முழுமையான நன்மையினைப் பெறமுடியாது.

அன்னார் கூறுகின்றார்கள்: مِمَّا تُحِبُّوْنَ என்பதன் பொருள் என்னுடைய பார்வையில் செல்வமாகும். ஏனென்றால்,

وَ اِنَّهٗ لِحُبِّ الْخَيْرِ لَشَدِيْدٌ

என்று இறைவன் கூறுகின்றான்.

மனிதனுக்கு செல்வம் மிகவும் விருப்பத்திற்குரியதாகும். எனவே முழுமையான நன்மையைப் பெற தனக்கு விருப்பமான செல்வத்திலிருந்து செலவு செய்து கொண்டிருப்பது அவசியமாகும். (ஹக்காயிக்குல் ஃபுர்கான், தொகுதி 1, பக் 500)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் பல இடங்களில் இதற்கு விளக்கமளித்துள்ளார்கள். ஓர் இடத்தில் கூறுகின்றார்கள்:

செல்வத்தின் மீது நேசம் கொள்ள வேண்டாம்.

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

என்று இறைவன் கூறுகின்றான். நீங்கள் உங்களுக்கு விருப்பமான செல்வங்களிலிருந்து (இறைவனுக்காகச்) செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையினைப் பெறமுடியாது.

மேலும் கூறுகின்றார்கள்: வீணான, பயனற்ற பொருளை செலவு செய்து ஒருவர் நன்மை செய்ததாக வாதிக்க முடியாது. நன்மைக்கான வாசல் மிகவும் குறுகலானதாக இருக்கின்றது. எனவே பயனற்ற பொருட்களை செலவு செய்து யாரும் அதில் நுழைய முடியாது. ஏனென்றால் திருக்குர்ஆனில் தெளிவாக கூறப்பட்டுள்ளது:

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

விருப்பத்திலும் விருப்பமான மற்றும் நேசத்திலும் நேசமான பொருளை செலவு செய்யாத வரை உங்களால் இறை அன்பிற்குரியவர் மற்றும் நேசத்திற்குரியவர் என்ற அந்த தரத்தை பெற இயலாது. துன்பத்தை ஏற்க விரும்பவில்லை என்றால், உண்மையான நன்மையை பெற விரும்பவில்லை என்றால், பிறகு எவ்வாறு உங்களால் வெற்றி பெற முடியும்.

எனவே சில மக்கள் இருக்கின்றனர். அவர்கள் சில வேளைகளில் நன்றாக சம்பாதிக்கின்றனர்; ஆனால் பொருள் தியாகங்களில் சம்பாதிக்கக்கூடிய ஓர் எளிய அஹ்மதி, நடுத்தரமாக சம்பாதிக்கக் கூடிய அஹ்மதி இருக்கக் கூடிய அந்தத் தரத்தில் கூட அந்த நபர்கள் இருப்பதில்லை. அப்படிப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.

இறைவன் கூறுகின்றான்: உண்மையான தியாகம் என்பது, எந்த பொருளை நீங்கள் நேசிக்கின்றீர்களோ அதை அவனுடைய வழியில் செலவு செய்வதாகும். அப்பொழுதுதான் நீங்கள் அவனுடைய திருப்தியை பெறக்கூடியவர்களாக இருப்பீர்கள். மேலும் அவனுடைய அருள்களுக்கு வாரிசாவீர்கள்.

இறைவன் ஓரிரு இடங்களில் மட்டுமின்றி, திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் இறைவழியில் செலவு செய்ய கட்டளையிட்டுள்ளான். உதாரணத்திற்கு ஓரிடத்தில் கூறுகின்றான்:

وَ اَنْفِقُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ وَ لَا تُلْقُوْا بِاَيْدِيْكُمْ اِلَى التَّهْلُكَةِ وَ اَحْسِنُوْا اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُحْسِنِيْنَ

அல்லாஹ்வின் வழியிலே (பொருளையும், உயிரையும்) செலவு செய்யுங்கள். நீங்கள் உங்கள் கைகளாலேயே (உங்களை) அழிவிற்காளாக்கிக் கொள்ளாதீர்கள். நன்மை செய்யுங்கள். அல்லாஹ் நிச்சயமாக நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான். (2:196)

எனவே இறைவழியில் செலவு செய்யாதது சில வேளைகளில் அழிவிற்கு உள்ளாக்கி விடுகின்றது. ஒரு பக்கம், நாங்கள் இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் ஆவோம்; மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பை நிறைவேற்றக்கூடியவர்கள் ஆவோம்; மேலும் அன்னாருடைய முன்னறிவிப்பின் அடிப்படையில் நாங்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில் இணைந்துள்ளோம் என்பது வாதமாக உள்ளது; மற்றொரு பக்கம், பொருள் தியாகத்தில் சில வேளையில் கருமித்தனம் ஏற்படுகின்றது என்றால், இது சரியானதல்ல.

ஜமாஅத்தில் பொதுவாக இதன் பக்கம் அதிகம் கவனம் உள்ளது. ஆனால் சில வசதி படைத்த மக்களிடம் இந்த எண்ணம் உருவாகி விடுகின்றது. அல்லாஹ்வுடைய அருளினால் ஜமாஅத்தின் பெரும்பாலான மக்கள் பொருள் தியாகத்தில் மிகவும் மகிழ்ச்சியோடு பங்கேற்கின்றார்கள். ஆனால் நான் கூறியதைப் போன்று கருமித்தனம் உருவாகக்கூடிய சிலரும் இருக்கின்றார்கள். இறைவழியில் செலவு செய்வது அவசியமாகும் என்ற இறைவனின் இந்த விஷயத்தை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

வருமானம் ஈட்டக் கூடிய சிலர் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால், திட்டங்களில் மிகவும் முந்திக்கொண்டு பங்கேற்கின்றார்கள். ஆனால் இங்கு இதையும் கூறி விடுகின்றேன், அவர்கள் தங்களுடைய கட்டாயச் சந்தாவில் விகிதாச்சாரப்படி செலுத்துவதில்லை. அவர்கள் முறையாக (செலுத்துபவர்களாக) இருப்பதில்லை. அவர்கள் தங்களை

சுயஆய்வு செய்து பார்க்க வேண்டும். அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓர் இடத்தில் கூறுகின்றான்:

اٰمِنُوْا بِاللّٰهِ وَ رَسُوْلِهٖ وَ اَنْفِقُوْا مِمَّا جَعَلَكُمْ
مُّسْتَخْلَفِيْنَ فِيْهِ فَالَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ
وَ اَنْفَقُوْا لَهُمْ اَجْرٌ كَبِيْرٌ

மக்களே! அல்லாஹ்விடத்தும், அவனுடைய தூதரிடத்தும் நம்பிக்கை கொள்ளுங்கள். முன்னுள்ள சமுதாயத்திற்கு பிறகு அவன் உங்களை எந்த சொத்துக்கு எஜமானர்களாக ஆக்கினானோ அதிிருந்து செலவு செய்யுங்கள். உங்களுள் நம்பிக்கை கொண்டவர்கள் இறைவழியில் செலவு செய்கின்றார்கள். இவர்களுக்கு பெரும் நற்பலன் உண்டு. (அல் ஹதீத்: 8)

எனவே இறைவழியில் செலவு செய்கின்றவர்களுக்கு அதிக நன்மைக்கான வாக்குறுதி அளித்துள்ளான். இதே போன்று இறைவன் கூறுகின்றான்:

وَمَا لَكُمْ اَلَّا تُنْفِقُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ
وَلِلّٰهِ مِيْرَاثُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ

வானங்கள், பூமி ஆகியவற்றின் மரபுரிமை அல்லாஹ்வுக்குரியதாக இருக்கும் நிலையில், நீங்கள் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யாமலிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? (அல் ஹதீது: 11)

இந்த பௌதிக உலகில் என்னென்னவெல்லாம் மனிதன் கையில் உள்ளதோ இறுதியில் அந்த அனைத்தையும் விட்டுவிட்டு அவன் மரணித்து விடுவான். மேலும் அவை அல்லாஹ்வின் கட்டுப்பாட்டில் வரும். மனிதனுடைய ஆதிக்கத்தில் எதுவும் இருக்காது. அல்லது சொத்துரிமையில் அவை பிரித்துக் கொடுக்கப்படும். வாரிசுகள் சரியாக இல்லை என்றால், அதை அவர்கள் வீணடித்து விடுவார்கள். அவன் கையில் எதுவும் இருப்பதில்லை. இவ்வுலகிலும் சரி! மறுமையிலும் சரி!. எனவே ஆரம்பத்திலிருந்தே இறைவனுக்கு அஞ்சி வாருங்கள். அவனுக்காக செலவு செய்யுங்கள். பிறகு இறைவன் அதில் பரக்கத் வழங்குவான். மேலும் சந்ததிகளையும் பாதுகாப்பான்.

அடுத்து, இதே போன்று இறைவன் திருக்குர்ஆனில் மற்றோர் இடத்தில் கூறுகின்றான்:

فَاتَّقُوا اللّٰهَ مَا اسْتَطَعْتُمْ وَ اسْمَعُوْا
وَ اَطِيْعُوْا وَ اَنْفِقُوْا خَيْرًا لِّاَنْفُسِكُمْ
وَمَنْ يُّوْقَ شُحَّ نَفْسِهٖ فَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ

உங்களால் இயன்றவரை நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி, செவி சாய்த்துக் கீழ்ப்படிந்து உங்களுடைய செல்வத்தை அவனது வழியில்) செலவு செய்யுங்கள். இது உங்களுக்கே மிக நல்லதாகும். தங்கள் உள்ளத்தின் கருமித்தனத்திலிருந்து காப்பாற்றப்படுவர்களே, வெற்றி பெறுபவர்களாவர். (அத்தகாபுன்: 17)

எனவே இறைவன் கூறுகின்றான்: இந்த கருமித்தனமும், மனஇறுக்கமும் சரியானது அல்ல. இறைவனுடைய அருள்களுக்குரியவர்களாக ஆக வேண்டுமென்றால், அவனுடைய வழிகளில் செலவு செய்யுங்கள். இதைப் போன்று நம்முடைய செல்வத்தை இறைவழியில் செலவு செய்ய வேண்டும் என்ற விஷயத்தை திருக்குர்ஆனின் எண்ணற்ற வசனங்கள் நமக்கு வலியுறுத்துகின்றன.

இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் பலமுறை கூறியது போன்று, மார்க்கத்தை பரப்புவதற்காக மார்க்கப் பணிகளை விரிவுபடுத்துவதற்காக இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்காக செல்வம் தேவைப்படுகின்றது. அதிலிருந்து நீங்கள் செலவு செய்ய வேண்டும்.

அடுத்து, இதையும் நினைவில் கொள்ள வேண்டும்! எந்த மக்கள் மார்க்கத்திற்காக பொருள் செலவு செய்கின்றார்களோ, நான் வசனத்தையும் படித்துக் கூறினேன், அதன் பலன் அவர்களுக்கு மட்டும் கிடைப்பதில்லை; அதற்கும் மேற்பட்டு முழு சமுதாயத்திற்கும் பலன் கிடைத்துக் கொண்டிருக்கும்.

எனவே சமுதாயத்தின் மீதான அனுதாபத்தின் எதிர்பார்ப்பு என்னவென்றால், மனித குலத்தின் மீதான அனுதாபத்தின் எதிர்பார்ப்பு என்னவென்றால், நாம் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்ய வேண்டும். மக்களுக்கு உதவி செய்வதற்காக செலவு செய்ய வேண்டும். இஸ்லாத்தை பரப்புவதற்காக செலவு செய்ய வேண்டும்.

ஹதீஸ்களிலும் இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல இடங்களில் இதைப் பற்றி நமக்கு பொருள் தியாகம் செய்ய வேண்டும் என்று கூறியிருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்களிடம் இருந்து அறிவிப்பு கிடைக்கின்றது இது ஹதீஸே குதுஸியாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் கூறுகின்றான்: ஆதமின் மகனே! நீ உன்னுடைய கருவூலத்தை என்னிடம் கொடுத்து, திருப்தி அடைந்து விடு! நெருப்பு பற்றிக் கொள்ளும் என்ற அபாயம் அதற்கு இல்லை. தண்ணீரில் மூழ்கி விடும் என்ற அச்சமில்லை. திருடன் திருடி விடுவான் என்ற அச்சமில்லை. என்னிடம் வைக்கப்படுகின்ற கருவூலத்தை நான் அதை முழுவதுமாக உனக்கு அதிகமாக தேவைப்படுகின்ற அந்த நாளில் திருப்பி தருவேன்.

எனவே இது அல்லாஹ்வின் வாக்குறுதி ஆகும். இறை வழியில் செலவு செய்தால் அல்லாஹ் முழுவதுமாக அதை திருப்பித் தருவான். திருக்குர்ஆனிலும் இறைவன் கூறுகின்றான்:

وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ يُّوَفَّ اِلَيْكُمْ
وَاَنْتُمْ لَا تُظْلَمُوْنَ

(2:273)

அவனுடைய வழியில் நீங்கள் எந்த நற்பொருளை செலவு செய்தாலும் அவன் அதை முழுவதுமாக உங்களுக்கு திருப்பி தருவான்.

அதற்கும் மேற்பட்டு, மற்ற இடங்களில் இதையும் கூறியுள்ளான். அதைவிட பன்மடங்கு அதிகரித்து திருப்பி தருவான். எனவே எந்த மக்கள் இறைவழியில் செலவு செய்கின்றார்களோ அவர்களுக்கு இறைவன் கொடுக்கும் வழிமுறை இதுவேயாகும்.

நாம் நற்பேறு பெற்றவர்கள். அதாவது நான் முன்பு கூறியதைப் போன்று, பெரும்பாலான அஹ்மதிகள் இவ்விஷயத்தை புரிந்திருக்கின்றார்கள். அவர்கள் எண்ணற்ற செல்வங்களை செலவு செய்கின்றார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய காலத்திலும் பொருள் தியாகத்திற்கான இப்படிப்பட்ட உதாரணங்கள் இருக்கின்றன. இன்னும் கூறுவதாயின், அதைக் கண்டு அன்னார் (அலை) ஒருமுறை கூறினார்கள்:

வறுமையில் இருக்கக்கூடிய இந்த மக்கள், ஏழை மக்கள் ஆவர்; இருப்பினும் மார்க்கத்திற்காக எப்படி இவ்வளவு தியாகங்கள் செய்கின்றனர்! என்று எனக்கு ஆச்சரியம் ஏற்படுகின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 10, பக் 263)

இன்றும் இதே நிலைதான் இருக்கின்றது. பொதுவாக பெரும்பாலான அஹ்மதிகள் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்ய வேண்டும் என்ற விஷயத்தை புரிந்து வைத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு இவ்விஷயத்தில் அதிக புரிதல் இருக்கின்றது. நான் பார்த்துள்ளேன். பெரும்பாலான ஏழைகள் அல்லது நடுத்தர வர்க்கத்தின் சம்பாதிக்கக் கூடியவர்கள் பெரும் பெரும் தியாகங்களை செய்கின்றார்கள். ஏனென்றால், இறைவன் இச்செல்வத்தை நமக்கு திருப்பி தருவான்; அல்லது நாம் அவனுடைய அருளுக்குரியவர்கள் ஆவோம் என்ற புரிதல் அவர்களுக்கு இருக்கின்றது. அது எவ்வாறு என்பதை இவ்வுலகத்திலும், மறுமையிலும் அல்லாஹ் தான் அறிவான்.

உண்மையான விஷயம் என்னவென்றால், மறுமையில் இறைவன் இதை திருப்பித் தருவான். இவர்களுடைய நன்மையில் சேர்த்து விடுவான். இந்த தியாகங்கள் அவர்களுடைய படித்தரத்தை உயர்த்த காரணமாக அமையும்.

அடுத்து, ஒரு ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர் தூய்மையான வருமானத்திலிருந்து ஒரு பேரீச்சம் பழத்தை இறைவழியில், அல்லாஹ்வின் வழியில், கொடுப்பாரோ அல்லாஹ் தூய்மையானதையே ஏற்கின்றான்; அல்லாற் அந்த பேரீச்சம் பழத்தை வலது கையால் ஏற்றுக்கொண்டு அதை அதிகரித்துக் கொண்டே செல்வான். எதுவரை என்றால், அது ஒரு மலை அளவிற்கு ஆகிவிடுகின்றது.

அன்னார் (ஸல்) ஓர் உதாரணம் கொடுக்கின்றார்கள்: எவ்வாறு உங்களில் ஒருவர் ஒரு சிறிய கன்று வளர்க்கின்றார். அது பெரிய விலங்காக மாறி விடுகின்றது. எவ்வாறு சிறிய கன்று வளர்ந்து பெரிதாகின்றதோ, அதேபோன்று நீங்கள் இறை வழியில் கொடுத்தால் உங்களுடைய செல்வமும் பெரிதாகின்றது. ஆனால் நிபந்தனை என்னவென்றால், செல்வம் தூய்மையானதாக இருக்க வேண்டும். தவறான வழியில் சம்பாதிக்கப்பட்டதாகவும். அந்த செல்வம் தவறான வழியில் சேர்த்து, பிறகு சந்தாவில் செலுத்தப்பட்டதாகவும் இருக்கக் கூடாது. தூய செல்வங்களிலிருந்து கொடுக்கப்படுகின்ற பொருளையே இறைவன் ஏற்றுக் கொள்கின்றான்.

அடுத்து, ஒரு ஹதீஸில் வருகின்றது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மறுமை நாளன்று கணக்கு வழக்கு முடியும் வரை, இறைவழியில் செலவு செய்கின்றவர், தான் செலவு செய்த அந்த செல்வத்தின் நிழலில் இருப்பார். எனவே கியாமத்து நாளன்று பொருள் தியாகங்கள் அல்லாஹ்வுடைய அருளை ஈர்க்கக்கூடியதாக இருக்கின்றன. அது தூய உள்ளத்துடனும், தூய்மையான செல்வத்திலிருந்தும் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது நிபந்தனை.

நான் கூறியதைப் போன்று, ஜமாஅத் மக்கள் விஷயத்தை புரிந்து வைத்திருக்கின்றார்கள். இது குறித்து இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:

இறையச்சத்தின்படி நடக்கின்ற அவர்களுடைய பொருள் தியாகங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பிறகு அவர்களுக்கு அல்லாஹ் எண்ணற்ற முறை வழங்குகின்றான். ஜமாஅத்தினுடைய பெரும்பாலான மக்கள் இதன்படி அமல் செய்ய முயற்சி செய்கின்றார்கள். இறைவன் திருக்குர்ஆனில் ஓர் இடத்தில் கூறுகின்றான்:

وَمَنْ يَّتَّقِ اللّٰهَ يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا ۙ
وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ ؕ
وَمَنْ يَّتَوَكَّلْ عَلَى اللّٰهِ فَهُوَ حَسْبُهٗ ؕ
اِنَّ اللّٰهَ بَالِغُ اَمْرِهٖ ؕ قَدْ جَعَلَ اللّٰهُ
لِكُلِّ شَىْءٍ قَدْرًا

(அத்தலாக்: 3-4)

பொருள்:

எவர்கள் இறையச்சத்தை மேற்கொள்கின்றார்களோ இறைவன் அவர்களுக்காக ஏதேனும் ஒரு வழியினை ஏற்படுத்தி விடுகின்றான். அவர்கள் எதிர்பாராத இடத்திலிருந்து அவன் அவர்களுக்கு உணவளிப்பான். அல்லாஹ்விடம் நம்பிக்கை வைப்பவருக்கு அவனே போதுமானவன். நிச்சயமாக அல்லாஹ் தனது நோக்கத்தை நிறைவேற்றுவான். அல்லாஹ் ஒவ்வொன்றிற்கும் ஓர் அளவை நியமித்துள்ளான். அவனுக்கு அதற்கேற்றார் போல் கொடுப்பான்.(அத்தலாக்: 3 -4)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நாம் இறையச்சம் மற்றும் தூய்மையில் எந்த அளவு முன்னேறியுள்ளோம் என்பதை எப்பொழுதும் பார்க்க வேண்டும். இதனுடைய அளவுகோல் திருக்குர்ஆன் ஆகும்.

அல்லாஹ் இறையச்சம் உடையவர்களின் அடையாளங்களில் இந்த அடையாளத்தையும் வைத்துள்ளான். அதாவது அல்லாஹ் இறையச்சம் உடையவர்களை உலக அருவருப்புகளிலிருந்து விடுவித்து அவர்களுடைய பணிகளுக்கு தானே பொறுப்பேற்கின்றான்.

அவன் கூறுகின்றான்:

وَمَنْ يَّتَّقِ اللّٰهَ يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا ۙ
وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

எவர் இறைவனுக்கு அஞ்சுவாரோ அவருக்கு அல்லாஹ் ஒவ்வொரு துன்பத்திலிருந்தும் விடுதலைக்கான வழியை காட்டி விடுகின்றான். இறைவனிடம் அஞ்சுபவரே இறைவனுக்காக தியாகம் செய்யக்கூடியவர் ஆவார். (அத்தலாக்: 3 )

அவர்கள் இவ்வாறு செய்யும் பொழுது, பிறகு நம்முடைய தேவை எங்கிருந்து நிறைவேறும்? நம்முடைய செலவீனங்கள் எவ்வாறு நிவர்த்தி ஆகும்? என்ற கவலை இருக்காது. இறைவன் அவர்களுக்கு வழிகளை காண்பித்து கொண்டே செல்கின்றான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவன் அவர்களுக்கு நல்வழியை ஏற்படுத்துகின்றான். மேலும் அவர்களுக்காக அவர்கள் அனுமானிக்க முடியாத இடத்திலிருந்து வாழ்க்கைக்குத் தேவையானவற்றை வழங்குகின்றான். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக் 10-11, 2022-ம் ஆண்டு பதிப்பு)

ஓர் இடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அல்லாஹ் தனக்காக தியாகம் செய்யக் கூடியவர்களை, இறையச்சத்தின்படி நடக்கக் கூடியவர்களை துன்பத்திலிருந்து பாதுகாக்கின்றான். கூறுகின்றார்கள்:

எவர்களுக்கு இறைவன் பொறுப்பேற்கின்றானோ அவர்களுக்கு உலக துன்பங்களில் இருந்து விடுதலை அளிக்கின்றான். அவர்கள் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் தப்பித்து விடுகின்றார்கள். மேலும் உண்மையான சுகத்திலும் மற்றும் நிம்மதியான வாழ்க்கையிலும் நுழைந்து விடுகின்றார்கள். அவர்களுக்காக .அவர்களுக்கு.

وَمَنْ يَّتَّقِ اللّٰهَ يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا ۙ
وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

என்ற இறை வாக்குறுதி உள்ளது.

எவர்கள் இறையச்சத்தை மேற்கொள்வார்களோ அவர்களை அல்லாஹ் தன்னுடைய அருளினால் ஒவ்வொரு துன்பம் மற்றும் துயரத்தில் இருந்தும் வெளியேற்றுகின்றான். அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு தானே பொறுப்பேற்கின்றான். அவர்கள் அனுமானிக்க முடியாத வழியிலிருந்து அவர்களுக்கு வழங்குகின்றான்.

இதைப் போன்றே அன்னார் (அலை) ஓர் இடத்தில் கூறுகின்றார்கள்:

நம்பிக்கை கொள்ளக்கூடியவர் இறைவன் புறம் குனியக்கூடியவர் ஒருபோதும் வீணாக மாட்டார்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: உண்மையான ராஸிக் (உணவளிப்பவன்) இறைவன் ஆவான். எந்த மனிதர் அவன் மீது நம்பிக்கை வைக்கின்றாரோ, அவர் ஒருபோதும் வாழ்வாதாரத்தில் இருந்து இழப்புக்குரியவராக இருக்க மாட்டார். தன் மீது நம்பிக்கை வைக்கக் கூடிய மனிதனுக்காக அவன் எல்லா புறத்திலிருந்தும் எல்லா இடத்திலிருந்தும் வாழ்வாதாரத்தை வழங்குகின்றான்.

இறைவன் கூறுகின்றான்: என் மீது எவர்கள் நம்பிக்கை கொள்வார்களோ மேலும் உறுதியான நம்பிக்கையில் நிலைத்திருப்பார்களோ அவர்களுக்காக நான் வானிலிருந்து (அருளைப்) பொழியச் செய்கின்றேன்; மேலும் (அவர்களின்) கால்களுக்கு கீழே இருந்து (அவர்களின் இரட்சிப்பிற்கான வழியை) வெளிப்படுத்தி விடுகின்றேன்.

எனவே ஒவ்வொரு மனிதனும் இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.

இதைப் போன்று ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் பெரும் அறிவுரைகளை பல இடங்களில் வழங்கியிருக்கின்றார்கள். மேலும் இந்த வசனத்திற்கு விளக்கமும் அளித்திருக்கின்றார்கள். அல்லாஹ்வுடைய சிறப்பான அருள் என்னவென்றால், ஜமாஅத்தினுடைய மக்கள் இவ்விஷயத்தை புரிந்து வைத்திருக்கின்றார்கள். ஜமாஅத்திற்காக தியாகங்களும் செய்யக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். மேலும் அல்லாஹ்வுடைய அருள்களின் காட்சிகளை காணக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். உலகின் எண்ணற்ற உதாரணங்கள் ஒவ்வொரு வருடமும் நம் முன் வருகின்றன.

இப்பொழுது நான் வக்ஃபே ஜதீத் தொடர்பாக கூற இருக்கின்றேன். ஆகையால் வக்ஃபே ஜதீத் சந்தா செலுத்தியதால் எவர்கள் மீது அல்லாஹ்வுடைய அருள் இறங்கியதோ அல்லது தியாகங்கள் செய்ததால் அல்லாஹ் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றினான் என்ற நம்பிக்கை மற்றும் உறுதி எந்த மக்களுக்கு அல்லாஹ்வின் மீது அதிகரித்ததோ, அப்படிப்பட்ட மக்களுடைய சில உதாரணங்களை எடுத்து வைப்பேன். நான் கூறியதைப் போன்று, குறைவாக சம்பாதிக்கக்கூடிய நடுத்தரவர்க்க மக்களில் தியாக உணர்வு மிக அதிகமாக இருக்கின்றது. பொதுவாக அவர்களுடைய உதாரணங்களே நம் முன் வருகின்றன.

இந்தோனேஷியாவின் ஒரு ஜமாஅத் பண்கீர் ஆகும். அங்கு தாஹிரா ஸாஹிபா என்ற பெண்மணி இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: நான் பார்ட் டைம் ஆசிரியையாக இருந்தேன். என்னுடைய வருமானம் மிகவும் குறைவு. வக்ஃபே ஜதீத் சந்தா ஆண்டு முடிவில், எனக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் தொகை வாக்குறுதி மீதமுள்ளது என்ற செய்தி நேஷனல் செக்ரட்டி ஸாஹிப் அவர்களிடமிருந்து கிடைத்தது. என்னிடம் ஒரு சிறுதொழில் தொடங்குவதற்காக வைக்கப்பட்டிருந்த சிறிய தொகை மட்டுமே இருந்தது. என்னிடம் அந்த அளவே பணம் இருந்தது.

எனினும், அவர் அதனை தனக்காக வைத்திருந்தார்.

அவர் கூறுகின்றார்: என்னுடைய உள்ளத்தில் சிறிது தயக்கம் ஏற்பட்டது. ஆனால் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து, அந்த அனைத்துத் தொகையையும் வக்ஃபே ஜதீதில் செலுத்தி விட்டேன். ஆக, இறைவனுடைய நாட்டத்தால், எதிர்பாராத விதமாக ஸ்கூலில் இருந்து எனக்கு மிக அவசியமாக இருந்த போனஸ் கிடைத்தது. மேலும் அத்துடன் அரசாங்கம் சார்பாக மானியம் பெறக் கூடியவர்களில் எனது பெயரையும் இணைத்து விட்டார்கள் என்ற நற்செய்தியும் கிடைத்தது. அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் இறைவனுக்கு சரியாக நன்றி செலுத்துவதற்குள் பல வருடங்களாக காத்திருந்த என்னுடைய டீச்சர் ரிஜிஸ்ட்ரேஷன் நம்பரும் வழங்கப்பட்டு விட்டது. உடனடியாக என்னுடைய வேலை நடந்து விட்டது. அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவனுடைய இந்த அருள் இந்த சந்தா செலுத்துவதின் முக்கியத்துவத்தின் காரணமாக கிடைத்தது என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

கிழக்கு ஆஃப்ரிக்காவின் ஒரு நாடான கென்யா உள்ளது. இந்தோனேஷியாவுக்கும் கென்யாவுக்கும் ஆயிரக்கணக்கான மைல் தொலைவு உள்ளது. ஆனால் எல்லா இடத்திலும் இறைவன் அவர்களுக்கு எவ்வாறு வழங்குகின்றான், இறைவனுடைய அருள் என்னவென்று சிந்தியுங்கள்.

கென்யாவுடைய அமீர் ஸாஹிப் அவர்கள் ஒரு சம்பவத்தை எழுதுகின்றார்கள்:- ஒரு முஅல்லிம், ஒரு பெண்மணியுடைய சம்பவத்தை கூறுகின்றார் :

குறிப்பான ஒரு வருமானம் இல்லாமல் இருந்தபோதிலும், அவர் முறையாக சந்தா செலுத்தி வரக்கூடியவர் ஆவார். சந்தா விவகாரங்களில் மிகவும் உறுதியானவர். இவ்வாறான

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 19-26 FEB 2026 Issue No. 8 & 9

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

நிலைகளில் எந்த அளவுக்கு தேவை உள்ளது, செல்வத்தின் மீது எந்த அளவிற்கு பற்று இருக்க வேண்டும் என்பது தெரிகின்றது. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதைப் போன்று, இந்நிலையில் அல்லாஹ்வுடைய வழியில் செலவு செய்வது உண்மையில் இதயத்தை வெளியே எடுத்து வைப்பதற்கு சமமாகும்.

எவ்வாறு இருப்பினும் இந்த வருடம் அவர்களுடைய வக்ஃபே ஜதீத் உடைய வாக்குறுதி 400 ஷில்லிங் ஆகும். அதை அவர்கள் கொடுத்து விட்டார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

என்னிடம் இந்த தொகைதான் இருந்தது. இப்பொழுது நான் வெறும் கையோடு இருக்கின்றேன். ஆனால் அல்லாஹ் எவ்வாறு நடந்து கொண்டான்! அல்லாஹ் கூறுகின்றான்: நான் மனிதனுக்கு அவன் அனுமானிக்க முடியாத இடத்தில் இருந்து வாழ்வாதாரத்தை வழங்குகின்றேன்.

அவர்களை இறைவன் வெறுங்கையோடு விடவில்லை. நான் வெறும் கையோடு இருக்கின்றேன் என்று அவர்கள் கூறியபோது, இறைவன் கூறினான்: நான் உன்னை வெறுங்கையோடு விடமாட்டேன். சில நாட்களுக்குப் பிறகு அவர்களுடைய மகள் சார்பாக 1400 ஷில்லிங் பணம், இதைக் கூறியவாறு கொடுக்கப்பட்டது: இந்த பணத்திலிருந்து தங்களுடைய சந்தாவை செலுத்திவிட்டு, மீதத்தை உங்களுடைய செலவீனங்களுக்கு வைத்துக் கொள்ளுங்கள்.

அதற்குப் பிறகு அவர்களுடைய மருமகன் ஃபோன் செய்தார். திருமணத்திற்கு பிறகு பெண்ணுடைய மஹர் தொகை பெற்றோர்களுக்கு கொடுக்கின்ற சம்பிரதாயம் அங்கு உள்ளது. மருமகன் மஹர் தொகையில் இரண்டு மாடுகளை, அதனுடைய மதிப்பீடு 90 ஆயிரம் ஷில்லிங் ஆகும், அவர்களுக்கு அனுப்பி வைத்தார். இது மட்டும் நடக்கவில்லை. அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் 400 ஷில்லிங்கை கொடுத்தேன். ஆனால் இறைவன் எண்ணற்ற மற்றும் அசாதாரணமான முறையில் அருளினான். எப்படிப்பட்ட இடங்களில் இருந்து அருளினான் என்றால், எனக்கு எந்த எதிர்பார்ப்பும் இருந்ததில்லை.

பிறகு எதிர்பாராத விதமாக உறவினர்களிடம் இருந்தும், மற்ற பிள்ளைகளிடமிருந்தும் அவர்களுக்கு வாழ்க்கைக்கு தேவையான அன்பளிப்புகளும், தொகைகளும் வரத் தொடங்கின. அவர்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள். இதனால் சந்தாவின் அருள்கள் என்ற விஷயத்தில் அவர்களுக்கு முழுமையான நம்பிக்கை ஏற்பட்டது. சந்தாவினால் இறைவனுடைய அருள் இறங்குகின்றது. அத்துடன் அல்லாஹ்வுடைய அருள்களை கண்டு மக்களுடைய ஈமானும் அதிகரிக்கிறது.

கினீ கனாகிரி ஒரு ஆஃப்ரிக்க நாடாகும். அங்குள்ள முபல்லிஃக் எழுதுகின்றார்:

ஒரு மண்டலத்தில் கொன்டீயா என்ற ஒரு கிராமம் உள்ளது. அங்கு ஓர் அஹ்மதி பெண்மணி இருக்கின்றார். அவர் இந்த வருடம் தனது வாக்குறுதியாக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் கீனி ஃபராக் எழுதியிருந்தார். கேட்பதற்கு லட்சங்களாக தெரிகின்றது. ஆனால் அங்கு பண மதிப்பு அந்த அளவு இல்லை. ஆகையால், மிகவும் சாதாரண தொகை தான். எவ்வாறு இருப்பினும், வருடம் முடிவில் எங்களுடைய உள்ளூர் மிஷனரி, அவர்களுடைய கிராமத்திற்கு சந்தா வாங்க சென்றிருந்தார். அந்தப் பெண்மணி காய்கறி சந்தைக்கு சென்று இருந்தார். நேரம் குறைவாக இருந்ததால் முஅல்லிம் அவர்களை காணச் சந்தைக்கு சென்றார். அவர்களிடம் நீங்கள் வாக்குறுதி எழுதியிருந்த உங்களுடைய சந்தாவில் இந்த அளவு மீதம் உள்ளது என்று கூறினார். அதற்கு, இப்பொழுது செலுத்துவதற்கு என்னிடம் எதுவும் இல்லை. நீங்கள் இப்பொழுது சென்று விடுங்கள்; நான் இன்ஷா அல்லாஹ் செலுத்தி விடுகின்றேன் என்று அந்தப் பெண்மணி மிகவும் வருத்தத்துடன் கூறினார்.

இப்பொழுது பாருங்கள்! நம்பிக்கை கொண்டு இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட இந்தப் பெண்மணி ஈமானில் எந்த அளவு முன்னேறியுள்ளார்கள்! இப்பொழுது என்னால் செலுத்த இயலாது என்று தட்டிக் கழிக்காமல், என்னிடம் எதுவும் இல்லை; நான் விரைவாக ஏற்பாடு செய்து உங்களுக்கு கொடுத்து விடுகிறேன் என்று கூறுகின்றார்கள். எவ்வாறு இருப்பினும் அங்கிருந்து நம்முடைய முபல்லிஃக் சென்று விட்டார். அங்கிருந்து மற்றொரு ஊருக்கு சென்றுவிட்டு, அங்கிருந்து வரும் வழியில் மீண்டும் அந்தப் பெண்மணியிடம் வந்தார். அவர் ஒரு லட்சம் ஃபிராங்க் கொடுத்தார். இன்று என்னுடைய முழு நாளின் வருமானம் இந்த தொகை தான். இதை அல்லாஹ்வின் வழியில் கொடுக்கின்றேன் என்று கூறினார். மேலும் கூறினார்: பல நாட்களாக வீட்டில் நல்ல உணவு சமைக்கவில்லை. சாதாரண உணவை சமைத்து என் குழந்தைகளுக்கு கொடுத்து வந்தேன். ஆனால், இன்று நான் சம்பாதிப்பதிலிருந்து நல்ல உணவை குழந்தைகளுக்கு கொடுப்பேன் என்று நினைத்திருந்தேன். ஆனால் நீங்கள் கூறியதைப் போன்று, எனக்கும் அனுபவம் உள்ளது. இறைவழியில், அல்லாஹ்வுடைய வழியில், தனக்கு விருப்பமான செல்வத்தை செலவு செய்வதால், தியாகம் வீண் போகாது; மேலும் மனிதன் அனுமானிக்க முடியாத இடத்தில் இருந்து இறைவன் வழங்குகின்றான். என்னுடைய தியாகம் வீண் போகாது என்று எண்ணி, இன்று நான் இந்த அனைத்தையும் செலுத்துகின்றேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: உள்ளூர் மிஷனரி அங்குதான் நின்று கொண்டிருந்தார். அப்பொழுது அந்த பெண்மணியுடைய மகனிடமிருந்து ஃபோன் வந்தது. என்னிடம் உங்களுக்காக ஒரு பொருள் உள்ளது, உங்களுக்கு கொடுக்க வேண்டும், ஆகையால் தாங்கள் இன்ன இடத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார். இந்தப் பெண்மணி தன் மகனை சந்திக்க சென்றார். மகன் அவருக்கு ஐந்து லட்சம் ஃபிராங்க் கொடுத்து விட்டு, இது வீட்டு செலவீனங்களுக்கு என்று கூறினார். பெண்மணி மகிழ்ச்சியுடன் திரும்பி வந்தார். வந்து விஷயத்தை கூற தொடங்கிய போது, மீண்டும் ஃபோன் அடித்தது. வேறொரு நகரத்தில் வசிக்கின்ற இன்னொரு மகன், நான் ஒரு நகருக்கு சென்று கொண்டுதான் இருக்கின்றேன்; இங்குதான் நான் அருகாமையில் இருக்கின்றேன்; ஓர் இடத்திற்கு செல்கின்றேன். ஆகையால் என்னால் வர இயலாது; நீங்கள் என்னிடம் வாருங்கள்; உங்களுக்காக என்னிடம் ஓர் அன்பளிப்பு உள்ளது என்று கூறினார். அவர்கள் சந்திக்க சென்றார்கள். அந்த மகன் வீட்டு செலவினங்களுக்கு என்று மூன்று லட்சம் ஃபிராங்க் பணத்தை தன் தாய்க்கு கொடுத்தார். பெண்மணி திரும்பி வந்து, இது இறைவனுடைய அருள் மட்டும் அல்ல; அதற்கும் மேற்பட்டு, என்னுடைய ஈமான்

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்.

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad